பக்கங்கள்:-பத்து
Registered as a News paper in Sri Lanka
விலை ரூபா. 6.00

# வலம்புரி
# Valampuri


ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT


சங்கு 04 வள்ளுவர் ஆண்டு 2034 புரட்டாதி 12 திங்கட்கிழமை (29.09.2003) தொலைபேசி - 2223378 ஒலி 284

## கண்காணிப்புக் குழு - புலிகள் வன்னியில் முக்கிய சந்திப்பு

(கிளிநொச்சி)

**தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தலைமையிலான உயர்மட்டக் குழுவினருக்கும், யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் றிட்ஜ்வே ரெல்விசன் தலைமையிலான குழுவினருக்குமிடையே நேற்றுக்காலை முக்கிய சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது. இச்சந்திப்பின்போது யுத்த நிறுத்த உடன்படிக்கையின் அமுலாக்கம் குறித்து விரிவாக ஆராயப் பட்டுள்ளது.**





கிளிநொச்சியில் உள்ள விடுதலைப் புலிகளின் நடுவப் பணியகத்தில் நேற்றுக் காலை 10.30 மணிக்கு ஆரம்பமான இச் சந்திப்பு 1.30 மணிவரையும் நீடித்துள்ளது.

சுமார் 3 மணித்தியாலங்கள் வரை நீடித்த இச் சந்திப்பில் தமிழீழ தேசியக் கொடியை தமிழர் தாயகப் பிரதேசத்தில் ஏற்றுவது தொடர்பான பூரண விளக்கத்தை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் விளக்கிக் கூறினார்.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்பட்டு இன்றுவரை எமது மக்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பவில்லை என்பதையும் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் சுட்டிக்காட்டிய தமிழ்ச்செல்வன் இனி வரும் காலங்களில் புரிந்துணர்வு உடனபடிக்கைக்கு அமைவாக அதில் கூறப்பட்ட விடயங்களை அமுல் படுத்துவதற்கு ஆவன செய்யப்பட வேண்டும் எனவும் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டார்.

உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசங்களில் மக்களின் மீள் குடியமர்வு தொடர்பாகவும், மாவட்ட மட்டத்தில் ஏற்படுகின்ற பிரச்சினைகளுக்கு யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு முடிவு காண்பதை விடுத்து நோர்வேயின் மத்தியஸ்தத்துடன் தீர்வு காண்பதே உசிதமானது என்று தமிழ்ச்செல்வன் கண்காணிப்புக் குழுவினரிடம் விளக்கிக் கூறியுள்ளார்.

இதேவேளை, மாவட்ட மட்டத்தில் இருந்து கலந்துகொண்ட உள்ளூர் கண்காணிப்புக் குழுவினர் யுத்த நிறுத்த மீறல்கள் குறித்து விடுதலைப் புலிகள் மீது அபாண்ட மான குற்றஞ் சுமத்தப்பட்டு வருவதா கவும், இதனை வருங்காலத்தில் தவிர்த்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியில் வாகனவிபத்து காரைநகர் வாசி மரணம்

(கிளிநொச்சி)

ஏ-9 கண்டி வீதியில் கிளிநொச்சி பிரதான தபால் கந்தோருக்கு அண்மையில் இடம்பெற்ற வாகன விபத்தொன்றில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார், மற்றொருவர் காயமடைந்துள்ளார்.

நேற்று நண்பகல் 12 மணியளவில் இடம்பெற்ற இவ்விபத்தில் சைக்கிளில் வந்துகொண்டிருந்த காரைநகரைச் சேர்ந்தவரும், கிளிநொச்சியில் உள்ள தனியார் வர்த்தக நிலையத்தில் கடமையாற்றி வருபவருமான ச.செந்தில்நாதன் (வயது 24) என்பவரே உயிரிழந்தவராவார்.

வவுனியா நோக்கிச் சென்றுகொண்டிருந்த டொல்பின் ரக வாகனம் மற்றும் முச்சக்கர வண்டி என்பவற்றுடன் எதிரே வந்த துவிச்சக்கர வண்டி மோதியதாலேயே இவ்விபத்து ஏற்பட்டுள்ளது.

முச்சக்கரவண்டிச் சாரதியான பாலசிங்கம் பிரபாகரன் (பரந்தன் வயது - 24) என்பவர் காயமடைந்துள்ளார்.

(வ)

## தமிழீழ தேசியக் கொடியை ஏற்றமுன் புலிகள் - பொலிஸார் பேசவேண்டும்

### கண்காணிப்புக் குழுத் தலைவர் பி.பி.ஸிக்குப் பேட்டி

(நமது நிருபர்)

தமிழர் தாயகப் பிரதேசங்களில் இடம்பெறும் வைபவங்களில் தமிழ்த் தேசியக் கொடி ஏற்றப்படுவது தொடர்பாக அவ்வப் பிரதேசங்களில் உள்ள விடுதலைப் புலிகளும், பொலிஸாரும் ஒன்றுகூடிப் பேசவேண்டும். தேவை ஏற்படும் போது எங்களையும் அழைத்து சம்பந்தப்பட்ட நிகழ்வுகளில் கொடியேற்றுவதா இல்லையா? என்பது குறித்து முடிவுகள் மேற்கொள்ளப்படலாம். இவ்வாறு யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் றிட்ஜ்வே ரெலவிசன் பி.பி.ஸிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களுடன் இடம்பெற்ற நேற்றைய சந்திப்பின் பின்னர் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் றிட்ஜ்வே ரெல்விசன் பி.பி.ஸிக்கு அளித்த பேட்டியில் மேலும் தெரிவித்திருப்பதாவது,

(10 ஆம் பக்கம் பார்க்க)

## நாட்டில் சமாதானம் ஏற்படவில்லை நீண்ட யுத்தமே நடக்கப்போகிறது

### ஆரூடம் கூறுகிறார் ஜனாதிபதி

(நமது நிருபர்)

நாட்டில் தற்போது சமாதானம் நிலவுகிறது என அரசாங்கம் தெரி



வித்து வருகின்ற போதிலும், நடைமுறையில் சமாதானம் இல்லை. அதற்குப் பதிலாக தொடர்ந்தும் நீண்டகால யுத்தம் ஒன்று ஏற்படக் கூடிய சூழ்நிலையே காணப்படுகின்றது. இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா கூறியுள்ளார்.

இலங்கைச் சமுர்த்தி அபிவிருத்தி மற்றும் விவசாய ஆராய்ச்சி உதவி அதிகாரிகள் சங்கத்தின் ஆறாவது தேசிய மாநாட்டிற்குத் தலைமை தாங்கி பேசும்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். விஹாரமாதேவி திறந்தவெளி அரங்கில் இடம்பெற்ற இம் மாநாட்டில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தொடர்ந்து உரையாற்றுகையில்,

இன்றைய அரசியல், பொருளாதார சூழ்நிலையில் நாட்டின் தலைமைத்துவத்தை இளைய தலைமுறையின் ஒத்துழைப்பின்றி முன்னெடுத்துச் செல்ல முடியாது. பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சியில் அரசியல் பேதமற்ற முறையில் இளைஞர்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான துரித திட்டங்களை அவர்களது ஒத்துழைப்புடன் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளோம்.

தற்போதைய ஐக்கிய தேசிய முன்னணி அரசு பிரச்சினைகளைத் தீர்த்து விட்டதாகக் கூறிவருகின்ற போதும், எந்தவொரு பிரச்சினையையும் அரசு தீர்க்கவில்லை.

பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக் காலத்தில் யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருந்தபோதும், அபிவிருத்தித் திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆனால், இன்று சமாதானம் ஏற்பட்டுள்ளது என்று கூறி வருபவர்கள் நாட்டில் மீண்டும் நீண்டகால யுத்தம் ஒன்றுக்கு வழி ஏற்படுத்தி வருகிறார்கள் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

(ம)

## ஐ.நா.செயலாளர் அனான் இலங்கைக்கு வரமாட்டார்

(கொழும்பு)

ஒக்டோபர் 10ம் திகதி இலங்கை வருவதாக ஏற்கனவே திட்டமிட்டிருந்தும் ஐ.நா. செயலாளர் நாயகம் கொபி அனான் தற்போது வரமாட்டார் என்று தெரியவருகின்றது.

எனினும், அவர் திட்டமிட்டபடி இந்தியாவுக்கும், சிங்கப்பூருக்கும் செல்லவிருக்கின்றார்.

இலங்கைக்கும் அவர் விஜயம் செய்வதாக இருந்த போதிலும், விடுதலைப் புலிகள் அவரை வன்னிக்கு வருமாறு அழைத்துள்ளமை கொழும்பு நிர்வாகத்திற்குச் சங்கடத்தை ஏற்படுத்தி இருப்பதாக அரச வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. நோர்வே அனுசரணையாளர்கள் மூலமான ஐக்கிய நாடுகள் சபை வன்னியில் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களைப் பார்வையிடுமாறு புலிகள் அழைத்துள்ளனர். எனினும், அவர் வன்னிக்கு வருவதை கொழும்பு நிர்வாகம் விரும்பவில்லை.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## காங்கேசன் கடலில் வைத்து 7 இந்திய மீனவர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

இலங்கைக் கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன் பிடித்துக் கொண்டிருந்த 7 இந்திய மீனவர்களை காங்கேசன் துறைக் கடற்பரப்பில் வைத்து இலங்கைக் கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட மீனவர்கள் அனைவரும் மல்லாகம் நீதிமன்ற நீதிபதி திருமதி இளங்கோவன் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர். இதில் 2 படகோட்டிகளை எதிர்வரும் 10 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதிபதி ஏனைய 5 மீனவர்களையும் இந்தியக் கடற்படையிடம் ஒப்படைக்குமாறு இலங்கைக் கடற்படைக்கு உத்தரவிட்டார்.

(ந-5)

**வி.கே.சண்முகலிங்கம்**

# துடுப்பாட்டப் பயிற்றுநர் பதவியைத் துறந்தார்

(யாழ்ப்பாணம்)

வட-மாகாணத்தில் துடுப்பாட்டத் துறையில் நீண்ட அனுபவமும் செயற்திறனும் கொண்டு விளங்கிய யாழ்.மாவட்ட துடுப்பாட்டப்பயிற்றுநர்.வி.கே.சண்முகலிங்கம் சுயவிருப பின் பேரில் கடந்த வெள்ளிக்கிழமை தனது பதவியை இராஜிநாமாச் செய்துள்ளார்.

விளையாட்டுத்துறையில் மிகுந்த அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வந்த இவர், தனது இந்தத் திடீர் முடிவு பற றிக் கருத்துக் கூறுகையில்,

எனது வாழ்க்கைக் காலத்தின் அரைவாசியை விளையாட்டுத்துறைக் கென்றே அர்ப்பணித்து இருக்கின் றேன். விளையாட்டுத்துறையை தெய்வீகமாக நேசிக்கும் நான் விளை யாட்டு ஒழுங்குகளை மிகஇறுக்க மாக கடைப்பிடிப்பவன்.

ஒரு விளையாட்டு வீரனின் அடை யாளம் என்னவென்றால், தலைமைத துவத்திற்கும் அது தொடர்பான உத்தி யோக பூர்வத் தீர்மானத்திற்கும் கட் டுப்பட்டு நடத்தலாகும்.

இதனை, என்னுடைய காலப்பகு திக்குள் கடைப்பிடித்ததோடு மட்டு மல்லாமல் என்னைத் தொடர்ந்து வரும் சந்ததியையும் இந்த நடைமுறை யைக் கடைப்பிடிக்க வேண்டும்என்பதே எனது விருப்பமும் ஆகும.

நான் பயிற்றுநராக இருந்த காலப பகுதியில்,நான் கற்றுணர்ந்து கொண்ட துடுப்பாட்ட நுணுக்கங்களை எவ்வித ஒளிவு மறைவுமின்றி மாணவர்க ளுக்கு போதித்தும் இருக்கின்றேன்.

அவர்கள் என்பணியை தொடர் வார்கள். இதனை யாரும் தடுக்கவோ நிறுத்தவோ முடியாது.

எனவே,நான் இப்பணியில் இருந்து விலகினாலும், என் பயிற்சி முறை, எனது பணி யாழ். மண்ணில் தொடரும் என்றே நம்புகின்றேன் என்றார்.

(உ-10)

## அஞ்சல் தினப் போட்டிகள்

(தொல்புரம்)

அடுத்த மாதம் நடைபெறவுள்ள சர்வதேச அஞ்ச ) தினத்தை முன் னிட்டு, மாவட்ட மற்றும் மாகாண ரீதியில் பல ஆக்கத்திறன் போட்டி கள் நடாத்தப்படவுள்ளன.

இதற்கமைவாக,கட்டுரை வரை தல் போட்டி,சித்திரம் ஆக்கத்திறன் போட்டி மற்றும் முத்திரை சேகரித் தல் போட்டி நடாத்தப்படவுள்ளதாக வும். மேற்படிப் போட்டிகளில் வெற் றியீட்டியவர்களுக்குப் பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கப்படுமெனவும் யாழ்.மாவட்ட அஞ்சல் அத்தியட்ச கர் அறிவித்துள்ளார். (பி-70)

## திருட்டுத்தனமாக மண் அகழ்வு

(சுழிபுரம்)

சுழிபுரம் வடக்கு தேத்தாவடிப் பகுதியில் ஊமைக் கேணிக்கு அருகா மையிலுள்ள வெற்றுக்காணிகளில் திருட்டுத்தனமான மண் அகழ்வு நட வடிக்கைகள் தற்போது அதிகரித்துள்ள தாகத் தெரியவருகிறது.

மேற்படிக் காணிகளில் காணி உரிமையாளர்களின் அனுமதியின்றி வண்டில்கள் மற்றும் உழவு இயந்திரங் கள் மூலம் இரவு வேளைகளிலே மண் எடுத்துச் செல்லப்படுவதாகக் கூறப்படுகின்றது.

(பி-71)

## வினைத்திறன் தடைகாண் பரீட்சை

(தொல்புரம்)

உப-அஞ்சல் அதிபர்களுக்கான வினைத்திறன் தடைகாண் பரீட்சை எதிர்வரும் நவம்பர் மாதம் 30ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடாத்தப் படவுளளதாக யாழ்.மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் எஸ். சிவராசசிங்கம் தெரிவித்துள்ளார். (உ-70)

## கவிதைப் போட்டி முடிவுகள்

(கந்தரோடை)

முதியோர் தினத்தையொட்டி சண்டிலிப்பாய் கோட்ட பாடசாலை களுக்கிடையே நடாத்தப்பட்ட கவி தைப் போட்டிகளின் முடிவுகள் வெளி யாகியுள்ளன அவற்றின் விபரம் வரு மாறு:-

**கீழ்ப்பிரிவு**

1ம் இடம்- ம.ஜெனனி-யா/மானிப் பாய் மகளிர் கல்லூரி.
2ம் இடம்-யே.மேரி இமாக்குலின்-யா/இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலையம்.
3ம் இடம்-சோ. பிறைன் ஸ்ரனி- யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரி.

**மத்தியபிரிவு**

1ம் இடம்-ம.வனித்தா-யா/மானிப் பாய் மகளிர் கல்லூரி
2ம் இடம்-த.சசிரேகா-யா/பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம்.
3ம் இடம்-ஸ்ரீ.சிந்துஷா- யா/மாதகல் சென்.யோசப் மகாவித்தியாலயம்.

**மேற்பிரிவு**

1ம் இடம்-தே.பிரமதாசன்-யா/மானிப் பாய் இந்துக்கல்லூரி.
2ம் இடம்-இ.ரமேஷ்-யா/பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி.
3ம் இடம்-ஸ்ரானிஸ்லொஸ் அன்றஸ்ர மிலா-யா/இளவாலை- கன்னியர் மடம் மகா வித்தியாலயம். (உ-103)

## பாவோதல் போட்டி

(கந்தரோடை)

சங்கானை கல்விக் கோட்ட பாட சாலைகளுக்கு இடையிலான சகல கலா வல்லிமாலை பாஓதல் போட்டி கள் இன்று திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் நடைபெறவுள் ளது.

இப் போட்டியில் முதலாம் பிரிவில தரம் 10, 11 வகுப்புகளும், இரண்டாம் பிரிவில் தரம் 12, 13 வகுப்புகளும் பங்கு கொள்ளவுள்ளன.

சண்டிலிப்பாய்க் கோட்டப் பாடசாலை களுக்கிடையிலான சகலகலா வல்லி மாலை பாவோதல் போட்டி நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல் லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

(தி-103)

# பொலிஸாருக்கு தமிழ் மொழித் தேர்ச்சி வகுப்பு

(கொழும்பு)

அரசமொழி ஆணைக்குழுவும் அரச மொழித் திணைக்களமும் இணைந்து நாளை மறுதினம் முதல் பொலிஸ உத்தி யோத்தர்களுக்கான தமிழ் மொழித் தேர்ச்சி வகுப்பொன்றை கொழும்பு பொலிஸ் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தில் நடத்தவுள்ளதாக அரச மொழித் திணைக்கள ஆணையாளா அறிவித்துள்ளார்.

அரசமொழிக் கொள்கையை நடை முறைப்படுத்தும் நோக்கில் ஒழுங்கு செய் யப்பட்டுள்ள இவ் வகுப்பில் பொலிஸ் சார்ஜன்கள், பொலிஸ் இன்ஸ்பெக்டா கள் மற்றும் உதவிப் பொலிஸ் அத்தி யட்சகர்கள் ஆகியோர் கலந்து கொள் ளவுள்ளனர்.

தமிழ் மக்களால் செய்யப்படும் முறைப்பாடுகளை தமிழ் மொழியில் பதிவு செய்தல், முறைப்பாடு தொடர் பான விசாரணைகளை தமிழ் மொழி யிலேயே மேற்கொள்ளல், நீதிமன்றங் களில் அவர்களின் சாட்சியங்களை தமிழ் மொழியில் நெறிப்படுத்தல் ஆகியன பற்றி இத் தேர்ச்சி வகுப்பில் விளக்கமளிக்கப்படவுள்ளது.(உ-10)

# தென்மராட்சி ஆசிரியர்களுக்கு சேவைக்கால செயலமர்வு

(பளை)

தென்மராட்சி கல்வி வலயப் பாட சாலைகளில் தரம்-6 முதல் தரம்-9 வரையான வகுப்புக்களில் தகவல் தொழில் நுட்பத்திறன்கள், வாழ்க் கைத் தேர்ச்சி ஆகிய பாடங்களை கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும், தரம் 9முதல் தரம் 11வரையான வகுப் புக்களில் சித்திரபாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் 3ஆம் தவணைக் குரிய சேவைக்கால செயலமர்வு கள் ஆரம்பமாகியுள்ளன.

இதற்கமைய நேற்று முன்தினம் சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் தகவல் தொழில் நுட்ப பாட செயல மர்வு நடைபெற்றது.

இன்று திங்கட்கிழமை வாழ்க் கைத் தேர்ச்சிப்பாட செயலமர்வு நடை பெறவுள்ளது.

அதன்பின்னர் எதிர்வரும் ஒக் ரோபர் மாதம் 18,19,20 ஆம் திகதி களில் வரணி ஆசிரியர் வளநிலை யத்தில் சித்திர பாடச்செயலமர்வு இடம்பெறவுள்ளதாக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல் வராசா தெரிவித்துள்ளார்.(உ-97)

## பாடசாலை மாணவருக்கு உதவி

(தொல்புரம்)

வறுமைக் கோட்டின் கீழ் உள்ள பெற்றோரை இழந்த பாடசாலை மாணவர்களுக்கு தமிழர் புனர்வாழ்வு கழகத்தினர் பாடசாலை உபகரணங் களை வழங்கவுள்ளனர்.

இதனடிப்படையில் பாடசாலை களில் கல்வி கற்கும் தரம் 10ற்கு உட பட்ட மாணவர்களின் பெயர் விபரங் கள் பிரதேச செயலர் பிரிவு ரதியாக திரட்டப்பட்டு வருகின்றன. (தி-70)

## உலர் உணவுக் கொடுப்பனவு

(கந்தரோடை)

உலக உணவுத் திட்டத்தின் அனு சரணையுடன் மேற்கொள்ளப்பட்ட மல்லாகம் நொச்சிக்குளம் புனரமைப புப் பணிகளில் ஈடுபட்டுவந்த தொழி லாளர்கள், விவசாய சம்மேளன உறுப்பினர்களுக்கான உலர் உண வுக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இவற்றை அளவெட்டி மல்லாகம ப.நோ.கூ.சங்கத்தின் 9ம் கிளையில் பெறலாமென மல்லாகம் விவசாய சம்மேளனத் தலைவர் சு.பரமநாதன் தெரிவித்துள்ளார். (உ-103)


உங்கள் வலம்புரியின் வாரமலர்

வலம்புரியின் வாரமலர் பக்கங்கள் - 20 விலை :-14.00
சங்கு நாதம்
(29 செப் -05 ஒக்டோபர் 2003) Sankunatham
சங்கு :-03 வள்ளுவர் ஆண்டு 2034 தொலைபேசி :- 2223378 நாதம் :-29

ஒன்று சேரும் முஸ்லிம்கள்




அரசியல் - அறிவியல் - ஆன்மீகம் அதுவே உங்கள் சங்குநாதம்.

சங்குநாதம்

- அமெரிக்காவின் ஆதிக்கத்திற்குள் அகப்பட்ட ஐ.நா. சபை -கோவையூர் ஜெயன்
- தமிழக முதல்வர் ஜெயாவின் ஆட்சியில் கதிகலங்கும் அரசியல் தலைவர்கள் -டொறிங்ரன்
- முஸ்லிம் தலைவர்களின் கூட்டு சமாதானத்திற்கு வேட்டு. -விதுரன்
- திருகோணமலைத் துறைமுகத்தில் அமெரிக்காவின் கழுகுப்பார்வை - பவானி
- ஆலடி மாநாடு
- வியாசரின் பதில்கள்.
- செங்கை ஆழியானின் ஈழராஜா எல்லாளன் (தொடர் நவீனம்)
- பொன்.கணேசமூர்த்தியின் கடிவாளம் இல்லாத கனவு (நெடுங்கதை)

இன்னும் பற்பல...

வாசிக்கத் தவறாதீர்கள் திங்கள் வைகறையில் உங்கள் உள்ளங்களில் ஒலிப்பது

விலை ரூபா 14.00

வலம்புரியின் வாரமலர் பக்கங்கள் - 20 விலை :-14.00
சங்கு நாதம்
29செப். - 5ஒக்.2003 Sankunatham

# யுத்தத்தால் பாதிப்புற்ற பகுதிகளில் பணியாற்ற
# ஆசிரியர்கள், மருத்துவ நிபுணர்களை
# அனுப்பி உதவ பிரான்ஸ் அரசு விருப்பம்
## அமைச்சர் ஜயலத் முயற்சியில் இணக்கம்

(யாழ்ப்பாணம்)

பிரான்ஸ் அரசாங்கம் இலங்கையில் யுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள பகுதியிலுள்ள ஆஸ்பத்திரிகளுக்கு உதவிபுரிய விருப்பம் தெரிவித்துள்ளது. இந்தப்பகுதிகளில் பணிபுரிய ஆசிரியர்களையும் வேறு நிபுணர்களையும் அனுப்பி உதவுவதற்கும் பிரான்ஸ் விருப்பம் தெரிவித்துள்ளது.

அண்மையில் பிரான்ஸ் வெளிநாட்டு விவகாரங்கள் தொடர்பான இராஜாங்க அமைச்சர் ஹெறெனாட் முஸெலியருக்கும் இலங்கை புனர்வாழ்வு, மீள் குடியமர்வு அகதிகள் விவகார அமைச்சர் டாக்டர் ஜயலத ஜெயவர்த்தனாவுக்குமிடையில் பரிஸில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது மேற்படி விருப்பத்தை பிரான்ஸ் அமைச்சர் வெளியிட்டுள்ளார்.

பரிஸ் நகரில் இடம்பெற்ற மேற்படி இரு அமைச்சர்களுக்குமிடையிலான சந்திப்புப்பற்றி பிரான்ஸிலுள்ள இலங்கைத் தூதரகத்தின் துணை பிரதம அதிகாரி ரஞ்சித் ஜயசூரிய விடுத்துள்ள அறிக்கையில் மேற்படி தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

டாக்டர் ஜயலத்தின் முன் முயற்சியில் இடம் பெற்ற இந்தச் சந்திப்பின் போது,ஐரோப்பிய ஒன்றியத்தின் உதவியின் பேரில் யாழ்ப்பாணத்தில் ஏற்கனவே 55பாடசாலைகள் இயங்கத் தொடங்கியிருப்பதாகவும் மேலும் அதிக உதவிகளை பிரான்ஸிடமிருந்து எதிர்பார்ப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஆங்கிலம், பிரெஞ்சு மொழிகளைப பயிற்றுவிப்பதற்கான ஆசிரியர் பற்றாக்குறை மிகமோசமாகவிருப்பதாக தெரிவித்த அமைச்சர் யுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் பணிபுரிய மருத்துவ நிபுணர்கள், சுகாதார நலன்புரி ஊழியர்கள், சமூகசேவையாளர்கள் போன்ற பிரான்ஸ் நாட்டவர்களை வழங்கி உதவுமாறு கேட்டுக் கொண்டார்.

இதற்குப் பதிலளித்த பிரான்ஸ் அமைச்சர் மேற்கண்டவாறு கூறியிருபபதுடன், இலங்கையில் புனர்வாழ்வுப் பணிகளில் ஈடுபட ஆசிரியர்களையும் தொண்டர்களையும் அனுப்ப பிரான்ஸ் விரும்புகிறதென்றும் அவர்கள் பிரான்ஸ் தேசத்தவர்களாகவே இருப்பர் என்றும் பிரான்ஸில் குடியேறியவர்களாய் இருக்கமாட்டார்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார். (பி)

## லட்விய ஜனாதிபதியுடன் பிரதமர் ரணில் ஆலோசனை

(கொழும்பு)

ஐ.நா.பொதுச்சபைக்கூட்டத்தில் பங்குபற்றவென நியூயோர்க் சென்றிருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் லட்விய ஜனாதிபதி வீரவைக்கா றெபேக்காவும் நியூயோர்க் பென்ஜமின் ஹோட்டலில் சந்தித்துப் பேச்சுக்களை நடாத்தியுள்ளனர்.

இதன் போது இரு நாடுகளுக்குமிடையே அரசியல் உறவுகளைப் பலப்படுத்துவதற்கு இரு தலைவர்களும் இணக்கம் தெரிவித்துள்ளதுடன், இதற்கென நியமிக்கப்படும் உயர்மட்டக்குழுவினர் பரஸ்பரம் இருநாடுகளுக்கும் விஜயம் செய்து இவ்விடயம் தொடர்பாக ஆராய உள்ளனர்.

சோவியத் ஒன்றியத்திலிருந்து வேறாகப் பிரிந்து சென்ற லட்வியா, ஐரோப்பிய ஒன்றியத்துடன் விரைவில் இணையுமென எதிர்பார்க்கப் படுகிறது.

லட்வியா, ஐரோப்பிய ஒன்றியத்தின் உறுப்பு நாடாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டதும் ஒன்றியம் இலங்கைக்கு வழங்கும் உதவிகளை அதிகரிப்பதற்கு வேண்டிய பிரசாரத்தை லட்வியா மேற்கொள்ளும்,அத்துடன் கடல்வளம் மற்றும் தளபாடங்களுக்கேற்ற மரவகைகளின் ஏற்றுமதி என்பவற்றிலும் லட்வியா இலங்கைக்கு உதவும் என்று உறுதியளிக்கப்பட்டது.

இதேவேளை,இலங்கையின் சமாதான நடவடிக்கைகளில் ஏற்படக்கூடிய முன்னேற்றங்கள் பற்றியும் லட்விய ஜனாதிபதி இலங்கைப் பிரதமரிடம் கேட்டறிந்தார். (பி)

## கனேடிய உதவித் திட்டங்களை அந்நாட்டமைச்சர் பார்வையிடுவார்

(கொழும்பு)

அடுத்த மாதம் கனேடிய வெளிநாட்டமைச்சர் வில்லியம் கிரகம் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார். இவர் கனடாவின் உதவியுடன் நடைமுறைப்படுத்தப்படுகின்ற அபிவிருத்தித் திட்டங்களைப் பார்வையிடுவதோடு மேலும், உதவி தேவைப்படுகின்ற வேறு துறைகளைப் பற்றியும் ஆராயவுள்ளார்.

கடந்த மாதம் 25ஆம்திகதியன்று பிரதமரும்,கனேடிய வெளியுறவு அமைச்சரும் நியூயோர்க்கில் சந்தித்துப் பேசியதன் விளைவாகவே இவ் விஜயம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இச்சந்திப்பின் போது, இலங்கையின் தற்போதைய சமாதான முயற்சிகளைப் பாராட்டிய அவர், இனப் பிரச்சினைக்கு அனைவராலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வொன்றை இலங்கை விரைவில் எடுக்குமென தாம் நம்புவதாகவும் தெரிவித்தார்.

தற்போது கனடா வழங்கிவரும் நட்புறவு ரீதியிலான உதவிகளுக்கும் கனடாவின் சமாதானச் செயற்பாடுகளுக்கும பிரதமர் நன்றி தெரிவித்ததோடு, கனடாவின் மாநில ஆட்சிமுறை பற்றியும், இந்தியாவின் ஆட்சிமுறை பற்றியும் ஆராய்ந்து வடக்கு-கிழக்கின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றை ஏற்படுத்த விருப்பதாகவும் தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த கனேடிய வெளியுறவு அமைச்சர்,தாம் மாநில ஆட்சிமுறை பற்றி ஆராயும் வாய்ப்புகளை இலங்கைக்கு ஏற்கனவே வழங்கியுள்ளதாகவும் தேவைப்பட்டால் மேலும் வாய்ப்புகளை வழங்குவதாகவும் தெரிவித்தார்.

பிரதமரின் செயலாளர், ஐ.நா.வுக்கான நிரந்தர பிரதிநிதி ஆகியோர் கனேடிய வெளியுறவு அமைச்சருடனான இச்சந்திப்பில் கலந்து கொண்டிருந்தனர். (பி)

செங்கலடி-பதுளை வீதியில்

## விவசாயப் பயிர்ச்செய்கைக்கு விடுதலைப்புலிகள் அனுமதி

(கொழும்பு)

செங்கலடி-பதுளை வீதியை அண்மித்துள்ள விவசாயக் காணிகளில் பெரும்போக நெற்செய்கையை மேற்கொள்ள முஸ்லிம் விவசாயிகளுக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் அனுமதியளித்துள்ளனர்.

நேற்றுக்காலை இலுப்பையடிச் சேனையில் நடைபெற்ற வலய மட்ட கூட்டத்தில் இந்தத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதற்கமைய இவ்விவசாயக் காணிகளில் பெரும்போக நெற் செய்கையை மேற்கொள்வதற்கான நீர்ப்பாசன வசதிகளைச் செய்து தருவதாகவும், அப்பிரதேசங்களில் அமைக்கப்பட்டுள்ள காவல் அரண்களை அகற்றுவதற்கு கால அவகாசம் தருமாறும் குடும்பி மலைக்கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஜெயா கேட்டுக்கொண்டார்.

அத்துடன்,1990 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்த கொடிகாமம் மக்கள் மீளக் குடியமரும் பட்சத்தில், அவர்களுக்கான பாதுகாப்பு வழங்கப்படும் எனவும்அவர் உறுதியளித்துள்ளார்.

இக்கூட்டத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் சார்பில் குடும்பிமலைக்கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் ஜெயா தலைமையிலான குழுவினரும், முஸ்லிம் விவசாயிகள் சார்பில் ஏறாவூர் இணக்க சபைத்தலைவர் வை.எம்.ஏ.காதர் தலைமையிலான குழுவினரும் கலந்து கொண்டனர். (தி)

## மீளக்குடியமர்ந்தவரின் வீடு இடித்தழிக்கப்பட்டது

(குப்பிளான்)

அதியுயர் பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்துள்ளதாகக் கூறி கடந்த வெள்ளியன்று பொதுமக்கள் குடியிருப்புப் பகுதியில் அமைந்திருந்த குடிசையொன்றை இராணுவத்தினர் இடித்து அழித்துள்ளதாகத் தெரியவருகிறது.

குப்பிளான் வடக்கு படபத்திரகாளி கோயிலுக்கு அருகில் உள்ள இலங்கநாதன் கிருபாகரன் என்பவரது குடிசை வீட்டையே இராணுவத்தினர் இவ்வாறு இடித் துள்ளனர்.

மேற்படி பகுதியில் 1997ஆம் ஆண்டு மீளக் குடியேறுவதற்கு அனுமதியளிக்கப்பட்டு, மக்கள் மீளக்குடியமர்ந்துள்ள நிலையிலேயே,இப்பிரதேசம் அதியுயர் பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்துள்ளதால் இவற்றில் பொதுமக்கள் எவரும் குடியிருக்க முடியாது எனக் கூறி இராணுவத்தினர் மேற்படி வீட்டை இடித்துள்ளதாகத் தெரியவருகிறது.

அதேவேளை, இப்பகுதியில் உள்ள தமது சொந்த வீடுகளில் மீளக்குடியேறும் நோக்கில், கடந்த மாதம் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ளச் சென்ற இராசையா திருச்செல்வம் மற்றும் சோ. கணேசலிங்கம் ஆகியோரின் குடும்பங்களைக் குடியேறவிடாமல் இராணுவத்தினர் தடுத்து நிறுத்தியமை தெரிந்ததே.

பாதிக்கப்பட்ட மேற்படி நபர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு ஆகியவற்றில் இது குறித்து முறைப்பாடு செய்துள்ளது குறிப்பிடத்தக்கது. (உ-20)

பொதுநலவாய தொலைத்தொடர்பு ஸ்தாபனத்தின்

## உதவித் தலைவர் பதவிக்கு முதற் தடவையாக இலங்கையர் தெரிவு

(கொழும்பு)

பொதுநலவாய தொலைத் தொடர்பு ஸ்தாபனத்தின் இரண்டாவது உதவித தலைவராக இலங்கைத் தொலைத் தொடர்பு ஒழுக்காற்று ஆணைக் குழுவின் பணிப்பாளர் நாயகம் தேனிய கொரில்லே தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

உகண்டாவில் கம்பாலா நகரில் அண்மையில் நடைபெற்ற 43வது பொதுநலவாய தொலைத்தொடர்பு ஸ்தாபன மாநாட்டில் இடம்பெற்ற உத்தியோகத்தர்கள் தேர்வின் போதே இலங்கையைச் சேர்ந்த தேனியகொரில்லேக்கு இப் பதவி கிடைத்தது.

லண்டனில் தலைமைக்காரியாலயத்தை கொண்டுள்ளதும் 50 பொதுநலவாய நாடுகள் அங்கம்வகிக்கின்றதுமான இந்த ஸ்தாபனத்தில் இலங்கை அதிகாரிஒருவரிற்கு இத்தகைய உயர்பதவி கிடைத்தது இதுவே முதல்தடவையாகும்.

பொது நலவாய நாடுகளின் தொலைத் தொடர்பு தொழில்நுட்பத்தை விருத்தி செய்வதற்கென ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த ஸ்தாபனத்தின் அடுத்த மாநாட்டை எதிர் வரும் 2004ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் இலங்கையில் நடத்த வேண்டும் என, இலங்கை முன் வைத்த யோசனையும் அண்மையில் இடம்பெற்ற மாநாட்டில் ஏற்றுக் கொளளப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (பி-60,10)

### மரவேலை பயிற்சிநெறி

(தொல்புரம்)

வலிதென்மேற்கு பிரதேச செயலகத்தால் அடுத்த மாதம் முதலாம் திகதி மரவேலைப் பயிற்சி நெறியொன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

மேற்படி பயிற்சிக்குரிய விண்ணப்பங்களை 18 வயது முதல் 35 வயது வரையானவர்கள் தத்தமது கிராம சேவகர் ஊடாக உறுதிப்படுத்திய பின்னர், பிரதேச செயலரின் சிபாரிசு கடிதத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை,பயிற்சியில் சேர்த்துக் கொள்ளப்படுபவர்களுக்கு பயிற்சிக்காலத்தின் போது மாதாந்தம் 450 ரூபா ஊக்குவிப்புத் தொகை வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பி-70)

### அஞ்சல் தினம் பற்றிய கருத்தரங்கு

(தொல்புரம்)

அகில உலக அஞ்சல்தினம் தொடர்பான கருத்தரங்கொன்று யாழ். மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் ச. சிவராசசிங்கம் தலைமையில் இன்று காலை 9.00 மணிக்கு கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயத்திலும் மு.ப. 10.30 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும் மு.ப. 11.30 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியிலும் நடைபெறவுள்ளது. (பி-70)

### கூட்டம்

(பருத்தித்துறை)

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க வடமராட்சி வலய பொதுக்கூட்டம் இன்று பி.ப. 3.00மணிக்கு பருத்தித்துறை வடஇந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும் என வடமராட்சி வலயச் செயலாளர் ஆர். நாகேந்திரராஜா அறிவித்துள்ளார். (உ-52)

### பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களும் வேலை நிறுத்தம்

(சுதுமலை)

சுகாதார சேவை ஊழியர்களுக்கு ஆதரவாக யாழ்ப்பாணம், முல்லைத்தீவு ,கிளிநொச்சி,மன்னார், வவுனியா மாவட்டங்களில் உள்ள பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் இன்று திங்கட்கிழமை தொடக்கம் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

இதேவேளை, குடும்பநல சுகாதார ஊழியர்களின் தொழிற் சங்கமும் இந்த 5 மாவட்டங்களிலும் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களுடன் இணைந்து, வேலை நிறுத்தம் செய்யத் தீர்மானித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (உ-252)

### மின் விநியோகிக்க நடவடிக்கை

(குப்பிளான்)

புன்னாலைக்கட்டுவன் வடக்குப் பகுதிக்கு மின்சாரம் வழங்குவதற்குரிய ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கமைவாக, மேற்படி பகுதியில் மின்கம்பங்கள் நாட்டப்பட்டு வருவதுடன், வடக்கு புன்னாலைக் கட்டுவன் சந்திக்கு அருகில் புதிய மின்மாற்றி பொருத்துவது தொடர்பான ஆரம்பக் கட்ட வேலைகளும் நடைபெற்று வருகின்றன. (உ-20)


நாளை வெளிவருகிறது

கல்விப் பொதுத்தராதரப் பத்திர (சா/த) பயிற்சி

வினாததாள் தமிழ் மொழியும் இலக்கியமும்

ஆக்கம்:- திருமதி சி.தவராசா ஆசிரியா

மல்லாகம் மகாவித்தியாலயம்.




அண்மையில் யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் இடம் பெற்ற காங்கேசன் துறை மாவட்ட 23வது வருடாந்த சாரணர் பாசறை விழாவில் பங்கேற்ற சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலய மாணவர்களைப் படத்தில் காணலாம்.

# ஆப்கான் - பாகிஸ்தானுக்கிடையில்

# ஒஸாமா பின்லேடன் உலவிவருகிறார்

## அதிபர் முஷாரப்பின் திடுக்கிடும் தகவல்

(இஸ்லாமபாத்)

**அமெரிக்கா உட்படப் பல நாடுகளினாலும் தீவிரமாகத் தேடப்பட்டு வந்த சர்வதேச பயங்கரவாதி ஒஸாமாபினலேடன் பாகிஸ்தானுக்கும் ஆப்கானிஸதானுக்கும் இடையே உலாவி வருவதாகப் பாகிஸ்தான் அதிபர் பர்வேஷ் முஷாரப் ஒப்புக் கொண்டுள்ளார்.**

**இத்தகவல் அமெரிக்கா உட்படப் பல நாடுகளை அதிர்ச்சிக்குள்ளாகியுள்ளது.**



கனடாப் பத்திரிகை ஒன்றுக்கு நேற்று முன்தினம் அளித்த பேட்டி ஒன்றில் அதிபர் முஷாரப் இத்தகவலை வெளியிட்டுள்ளார்.

ஈராக் மீது போர் தொடுக்கப்பட்டதால் அமெரிக்காவிற்கு எதிரான மனநிலை பாகிஸ்தான் எல்லைப்புற மக்களிடையே நிலவுவதனால் இரண்டரைக் கோடி அமெரிக்க டொலர் பரிசு வழங்ககுவதாகத் தெரிவிக்கப்பட்டபோதும், எவரும் பின்லேடன் பற்றிய தகவலைக் கொடுக்க முன்வரவில்லை என்று அவர் தெரிவித்துள்ளார்.

ஒஸாமா பின்லேடன் சிறுநீரகக் கோளாறினால் பாதிக்கப்பட்டிருப்பதாக உளவுத்துறையினர் முன்னர் அறிவித்திருந்த தகவலைச் சந்தேகிப்பதாகப் பாகிஸ்தான் ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார்.

சர்வதேச பயங்கரவாதியான ஒஸாமா பின்லேடனை அமெரிக்கா உட்பட பின்லேடனின் தீவிரவாத அமைப்பான அல்-கெய்டாவின் தாக்குதல்களுக்கு இலக்கான நாடுகள் தேடிவருகின்ற நிலையில், முஷாரப்பின் இந்த அறிவிப்பு அந்நாடுகளைப் பெரும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளன.



இதேவேளை, தனது அல்-கெய்டா தீவிரவாத அமைப்பை பல நாடுகளிலும் உருவாக்கி அதனை விஸ்திரப்படுத்தி தீவிரவாத செயல்களைத் தூண்டிவிட்டுக்கொண்டிருக்கும் பின்லேடன் மிக விரைவில் கைதாகும் காலம் நெருங்குவதாக அவதானிகள் கருதுகின்றார்கள்.

(பி-2)



டாக்காவில் விற்பனைக்காக அல்லிக் கொடியைத் தலையில் சுமந்து செல்லும் வங்கதேசச் சிறுமி. தேசிய மலரான அல்லி, மக்கள் விரும்பிச் சாப்பிடும் உணவுப் பொருளாகவும் அங்கு பயன்படுகிறது.

### பாக். ஜனநாயகமுன்னணி தலைவர் நவாப் காலமானார்

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தான் ஜனாதிபது பாவேஷ் முஷாரப்பிற்கு எதிராக எதிர்க்கட்சிகளை ஒருங்கிணைத்து ஜனநாயக மீட்பு முன்னணி என்ற அமைப்பை உருவாக்கி அதன் தலைவராகச் செயற்பட்ட நவாப் ஷாதா நஸ்ருலா கான் நேற்று முன்தினம் காலமானார்.

மாரடைப்புக் காரணமாக கடந்த 24ஆம் திகதி இஸ்லாமபாத் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்ட இவருக்கு இறக்கும் போது வயது 85.

இவருடைய மறைவு குறித்து பர்வேஷ் முஷாரப்பும்,பிரதமர் ஜவருலால்கான் ஜமாலியும் இரங்கல் தெரிவித்துள்ளனர். (பி-2)

# அல்ஜீரிய இராணுவத் தாக்குதலில்

## 150 தீவிரவாதிகள் பலியாகினர்

(அல்ஜியர்ஸ்)

அல்ஜீரியாவின் இராணுவத்தினர் அண்மையில் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கைகளிலும், தாக்குதல்களிலும் 150 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர் என்று அந்த நாட்டுப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது

அல்ஜீரிய இராணுவத்தினர் அண்மையில் மேற்கொண்ட வெற்றிகரத்தாக்குதல் இதுவென்றும் தெரி

வரும் தாக்குதல்கள் தற்போது அல்ஜீரியாவின் ஷெரிப் மாநிலத்தில் இடம் பெறுவதாக அப்பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கையின் போது தீவிரவாத உறுப்பினர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களெனக் கருதப்படும் பெண்கள் மற்றும் சிறுவர்கள் ஆகியோரையும் இராணுவத்தினர் கண்டு பிடித்துள்ளனர்.



இராணுவத்தினரின் ஏவுகணைத் தாக்குதலுக்குப் பலியான 105 பேரின கருகிய நிலையிலான சடலங்கள் மீட்கப்பட்டபட்டுள்ளதாகவும் பத்திரிகைச் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன. (பி-2)

### குறித்த நேரத்தில் பாக். அதிபர் வரவில்லை

## ரஷ்ய அதிபர் புடின் உடனான முஷரப் சந்திப்பு ரத்தானது

(நியூயோர்க்)

குறிப்பிட்ட நேரத்திற்கு பாகிஸ்தான் அதிபர் சமுகமளிக்காத காரணததால் ரஷ்ய அதிபருடனான அவரது சந்திப்பு ரத்தாகியது.

ஐக்கிய நாடுகள் பொதுச்சபைக் கூட்டத்தில் கலந்துகொள்ள நியூயோர்க் சென்றுள்ள இரு நாட்டுத் த்லைவர்களும் தனிப்பட்ட முறையில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்த திட்டமிட்டிருந்தனர்.

## தமிழக தமிழர் விடுதலை இயக்க

கைதாகும் காலம் நெருங்குவதாக அவதானிகள் கருதுகின்றார்கள்.

(பி-2)

ருககு இறக்கும் போது வயது 85.

இவருடைய மறைவு குறித்து பர்வேஷ் முஷாரப்பும்,பிரதமர் ஜவ ருலால்கான் ஜமாலியும் இரங்கல் தெரி வித்துள்ளனர். (பி-2)

# 150 தீவிரவாதிகள் பலியாகினர்

(அல்ஜியர்ஸ்)

அல்ஜீரியாவின் இராணுவத் தினர் அண்மையில் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கைகளிலும், தாக் குதல்களிலும் 150 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர் என்று அந்த நாட்டுப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது

அல்ஜீரிய இராணுவத்தினர் அண்மையில் மேற்கொண்ட வெற்றி கரத்தாக்குதல் இதுவென்றும் தெரி விக்கப்படுகின்றது.

கடந்த இரண்டு வாரங்களாக இவர்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் தாக்குதல்கள் தற்போது அல் ஜீரியாவின் ஷெரிப் மாநிலத்தில் இடம் பெறுவதாக அப்பத்திரிகை யில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கையின் போது தீவிரவாத உறுப்பினர்களின் குடும் பத்தைச் சேர்ந்தவர்களெனக் கருதப் படும் பெண்கள் மற்றும் சிறுவர்கள் ஆகியோரையும் இராணுவத்தினர் கண்டு பிடித்துள்ளனர்.

இராணுவத்தினரின் ஏவுகணைத் தாக்குதலுக்குப் பலியான 105 பேரின கருகிய நிலையிலான சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும் பத்திரி கைச் செய்திகள் மேலும் தெரிவிக்கின் றன.

(பி-2)

## குறித்த நேரத்தில் பாக். அதிபர் வரவில்லை

# ரஷ்ய அதிபர் புடின் உடனான முஷரப் சந்திப்பு ரத்தானது

(நியூயோர்க்)

குறிப்பிட்ட நேரத்திற்கு பாகிஸ் தான் அதிபர் சமுகமளிக்காத கார ணததால் ரஷ்ய அதிபருடனான அவ ரது சந்திப்பு ரத்தாகியது.

ஐக்கிய நாடுகள் பொதுச்சபைக் கூட்டத்தில் கலந்துகொள்ள நியூ யோர்க் சென்றுள்ள இரு நாட்டுத் தலைவர்களும் தனிப்பட்ட முறையில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்த திட்டமிட்டிருந்தனர்.

எனினும் குறிப்பிட்ட நேரத்திற்கு ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் காத்திருந்த போதும், பாகிஸ்தான் அதிபர் பர்வேஷ் முஷாரப் குறித்த இடத்திற்கு, குறிப்பிட்ட நேரத்திற்கு செல்லவில்லை.

இந்தச் சந்திப்பிற்கான பயணத் திற்கு ஏற்பாடுகளை மேற்கொள்ள நியூயோர்க் பெலிஸார் தவறிவிட்ட தாலேயே அவரால் குறிப்பிட்டபடி செல்ல முடியவில்லை என பாகிஸ் தான் குற்றஞ்சாட்டியிருப்பதுடன் அமெரிக்க வெளியுறவுத் துறையின ரிடம் ஆட்சேபத்தினையும் தெரிவித் துள்ளது.

(பி-2)

# தமிழக தமிழர் விடுதலை இயக்க தலைவர் சு.ப. இளவரசன் கைது?

(சென்னை)

தமிழக. தமிழர் விடுதலை இயக் கத் தலைவர் சு.ப. இளவரசன் சேலத் தில் வைத்துக் கைது செய்யப்பட் டுள்ளார் எனவும், அவரை இரகசிய இடத்தில் வைத்துப் பொலிஸார் விசாரணைகள் நடத்தி வருவதாக வும் தெரிவிக்கப்படுகின்றது.

தமிழர் விடுதலை இயக்கம் பரம் பலூர் மற்றும் கடலூர் மாவட்டங்க ளில் அதிகளவு தொண்டர்களைக் கொண்ட அமைப்பாக இயங்கி வரு கின்றது.

இந்த இயக்கத்தை தமிழக அரசு தடை செய்துள்ள நிலையில் அதன் தலைவர் சு.ப.இளவரசன் சேலத் தில வைத்துக் கைது செய்யப்பட்டுள் ளார் என நேற்று முன்தினம் தெரி விக்கப்பட்டது. இந்தத் தகவலைத் தமிழகப் பொலிஸார் இது வரை உறுதிப்படுத்தவில்லை.

தமிழக அரசினால் தமிழர் விடுதலை இயக்கம் உட்படப் பல இயக்கங்கள் தடைசெய்யப்பட்டுள் ளமை இங்கு குறிப்பிடத்தக்கதா கும்.

(பி-2)



ஜப்பானின் வடபகுதி நகரங்களில் அண்மையில் தொடர் நில நடுக்கம் ஏற்பட்டது. ரிசசர்ட அளவுகோலில் 8 எனப் பதிவாகிய இந்த நில நடுக்கத்தினால் 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்தன. நூற்றுக்கணக்கானோர் காயமடைந்தனர். இந்த நிலநடுக்கத்தினால் டோமாகோமாய் நகரில் இருந்த தொழிற்சாலை தீப்பிடித்து எரியும் காட்சி.

# இந்தியா இன்சாட் 3-இ என்ற செயற்கைக் கோளை செலுத்தியது

(புதுடில்லி)


இந்தியா மற்றுமொரு செயற் கைக் கோளை நேற்று விண்ணுக்கு அனுப்பியுள்ளது.இந்திய விண் வெளி ஆராய்ச்சி நிறுவனம் தயாரித் த.இன்சாற் 3-இ என்ற செயற்கைக் கோளே விண்ணில் ஏவப்பட்டுள் ளது.

இந்திய நேரப்படி நேற்று அதி காலை 4.32 இந்த செயற்கை கோள ஏரியல் ரொக்கற் மூலம் விண்ணுக்கு ஏவப்பட்டது.

36 ரான்ஸிஸ்ட் கருவிகள் பொருத தப்பட்டுள்ள இந்த செயற்கைக் கோள விண்ணில் சென்றடைந்ததும் அதன் சமிக்ஞைகள் கர்நாடக மாநில அஸாமில் இருக்கின்ற தலைமைக் கட்டுபபாட்டு நிலையத்திற்கு கிடைக்கு மெனத் தெரிவிக்கப்படுகின றது.

தொலைத்தொடர்புத் தொலைக் காட்சி ஒளிபரப்பிற்கு பயன்படுத்தும் வகையில் இந்த செயற்கைக் கோள் உருவாக்கப்பட்டுள்ளது.

(பி-2)



இன்சாட்3-இ செயற்கைக்கோளை விண்ணில் ஏவ இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தில் ஆயத்தமாக இருந்தபோது.

# கோமாளிகள் பீடம்

# யாருக்கு பொருந்தும்?

ஐ.நா.பொதுச்சபையில் கலந்து கொள்ள இலங்கையின் சார்பில் ஜனாதிபதியா அல்லது பிரதமரா போவது? என்ற பிரச்சினை கடந்த சில வாரங்களாக அரசியல் வட்டாரங்களில் பெரும் சர்ச்சைகளை ஏற்படுத்தி விட்டு, இறுதியாகப் பிரதமர் தான் போவார் என்ற நிலையில் ஒரு முடிவுக்கு வந்தது. இந்த விடயம் பற்றி ஒரு கொழும்புப் பத்திரிகை குறிப்பிட்டு எழுதுகையில், இலங்கைத் தேசத்தின் தலைவராக ஜனாதிபதியும், இலங்கை அரசாங்கத்தின் தலைவராக பிரதம மந்திரியும் ஐ.நா.வுக்குப் போயிருந்தால் அது ஒரு பெரிய விகட நிகழ்ச்சியாய் இருந்திருக்கும் என்பது ஒருபக்கம் இருக்க, உலகின் முதலாம் நம்பர் (ஜோக்கர்களாக) கோமாளிகளாக உலகம் எம்மைப் பார்த்து சிரித்திருக்கும் என்று எழுதியிருந்தது.

நல்லகாலம் பிரச்சினை ஒருவாறு முடிவுற்று பிரதம மந்திரி அந்த மகாநாட்டிலும், அதன்பின் நடக்கவிருந்த எயிட்ஸ் சம்பந்தமான மகாநாட்டிலும் இலங்கையின் சார்பில் கலந்துகொண்டார்.

# நோய் தீரும் வழி இதுவா?

★ ★ ★

### நோய் தீரும் வழி இதுவா?

கால், கைகள் முடங்கிய நிலையில் ஒரு அம்மா வாங்கில் அமர்ந்திருந்தார். அவருக்குப் பக்கத்தில் அமர்ந்திருந்தவர் அந்த அம்மாவின் கைகளும், விரல்களும் குறண்டிப்போய் இருந்ததைப் பார்த்து விட்டு விசாரித்தார்.

தனக்கு இது இடைநடுவில் வந்த நோய் என்பதால் மாறிவிடும் என்ற நம்பிக்கையில் ஏதேதோ செய்து பார்த்துவிட்டு, கடைசியில் மதம் மாறியதாகவும், அதற்குப் பிறகு இப்பொழுது சுகம் ஏற்பட்டு வருவதாகவும் கூறினார்.

மதம் மாறுவதற்கு முன்னர் ''வைரவருக்கு வடை மாலை போட்டேன், பூசை வைத்தேன், நேர்த்திகள் எல்லாம் செய்தேன் - வைரவர் எல்லாவற்றையும் வேண்டிச் சாப்பிட்டு விட்டுப் பேசாமல் இருந்துவிட்டார் என்று குறைபட்டுக்கொண்டார் அந்த அம்மாள்.

''மதம் மாறிய பிறகு சுகம் என்று சொல்கிறீகள், பிறகு ஏன் டாக்டரிடம் வந்திருக்கிறீர்கள்?''

## அன்றும் இன்றும்

என்று கேட்டார் மற்றவர்.

''இதையும் செய்துகொண்டு ஜெபமும் செய்கிறேன்'' என்றார் அம்மாள்.

''மதம் மாறாமலே நீங்கள் இதையே செய்திருக்கலாம்'' என்றார் மற்றவர்.

''உங்களுக்கு விசுவாசம் இல்லை. அதனால் தான் இப்படிப் பேசுகிறீகள்'' என்றார் அந்த அம்மாள்.

''அதையேதான் நானும் சொல்கிறேன். உங்களுக்கு உங்கள் குல தெய்வத்தில் விசுவாசம் இருந்திருந்தால் உங்கள் முறைப்படி தெய்வத்தை வணங்கிக்கொண்டு டாக்டரிடமும் வைத்தியம் செய்து கொணடிருக்கலாம். அதை விடுத்து நோய் மாறும் என்பதற்காக விசுவாசத்தை மாற்றிக்கொண்டு மதம் மாறுவது என்பது எவ்வளவு மிக மோசமான காரியம் என்று அந்த அன்பர் கூறினார்.

மதம் மாறிய பிறகும் நோய் மாறாத நிலையில் டாக்டரின் மருந்தை நம்பி வந்திருந்த அவர், உண்மையில் டாக்டருக்குத்தான் விசுவாசத்தைக் காட்டியிருக்க வேண்டும் என்று பின்னாலிருந்த ஒருவர் கூறினார்.

விசுவாசம் இல்லாதவர்கள் இப்படித்தான் பேசுவார்கள் என்று அந்த அம்மாவின் பக்கத்திலிருந்த இன்னொருவர் கூறவே, பின்னாலிருந்த ஒருவர் சொன்னார். ''புதிசா மதம் மாறியவர்கள்தான் ஏதோ தாம்தான் உண்மையான விசுவாசிகள் போலப் பேசுவார்கள். நாங்களும் இருக்கிறோம் தானே''என்று தமது மதப்பிரிவின் பெயரையும் சொல்லி, தங்கள் பரம்பரையையும் சொல்லத் தொடங்கினார்.

விசுவாசம் பற்றி பேசியவர்கள் அததுடன் நிறுத்திக் கொண்டார்கள்.

# தோல்வியில் முடிந்த கன்கூன் மகாநாடு

இன்று வேற்று மதத்தவர்களாக இருக்கும் பெரும்பான்மையானவர்களும் இங்கு ஆதியில் இந்து மதத்தவர்களே. இவ்வாறான சிறு சிறு காரணங்களுக்காக - நோய் மாறும் என்ற நம்பிக்கை, பணம் கிடைக்கும் என்ற ஆசை, பதவி வந்து சேரும் என்ற நப்பாசை போன்ற காரணங்களுக்காக மதம் மாறியவர்களின் பின் சந்ததியினர் இன்று இந்து மதத்தையும் அதன் தொன்மையான நம்பிக்கைகளையும் இகழ்ந்துகொண்டும், ஏளனம் செய்துகொண்டும் இருக்கின்றார்கள்.

இந்துமதம் மிகவும் விசாலமானது. அது ஒரு சமுத்திரத்தைப் போன்றது. சமுத்திரத்தில் இருந்து பல்வேறு உயிரினங்கள் தோன்றியது போலவே, இந்து மதத்திலிருந்து பல்வேறு சிந்தனைகளும், நாகரிகங்களும், மதங்களும் கூட தோன்றியுள்ளன. இந்து சமயத்தின் சகிப்புத் தன்மையானது காலப்போக்கில் பல்வேறு சிறு மதங்களை தன்மயப்படுத்தி இணைத்துக்கொண்டுள்ளது.

இந்து சமயத்தவர்கள் மத்தியில் வறுமையும், சாதிக்கொடுமையும், உயர்வு தாழ்வுகளும் அற்ற ஒரு பொது நிலை உருவாகும் போது இவ்விதமான மத மாற்றங்களுக்கு இடமிருக்க முடியாது. அதுவரை பலவீனமான மனம் கொண்டவர்களை மாற்றுச் சமயத்தவர்கள் தமது பேச்சுத் திறமையாலும், வேறு பல கவர்ச்சிச் செயற்பாடுகளாலும் மதம் மாற்றத்தான் பார்ப்பார்கள். அப்படியான ஒரு நிலை வரும்போது காளான்கள் போன்று வெளிநாட்டுப் பணத்தில் முளைத்துள்ள பல அமைப்புகள் காணாமல் போய் விடும்.

மரபு ரீதியாக நிலைபெற்றுள்ள சமயத்தவர்கள், சமய மாற்று முயற்சிகளில் ஈடுபடுவதில்லை. அவர்கள் எல்லாச் சமயத்தவர்களோடும் அன்பாகவும் பண்பாகவும் பழகி வருகிறார்கள்.

★ ★ ★

### சடலத்தோடு வாழ்ந்தவர்

அமெரிக்காவில் அரிசோனா மாநிலத்தில் ஒரு மனிதர் - அவருக்கு 75 வயது. பெயர் எட்வின ரவ்லட்.இவர் தனது மறைந்துபோன மனைவியின் சடலத்தை 6 வருடங்களாக குளிர்சாதனப் பெட்டியில் வைத்துப் பாதுகாத்து வந்துள்ளார். என்றோ ஒருநாள் மனைவி உயிர்பெற்று எழுவாள் என்பது அவரது ஆசை.

ஆனால், அவரது மகள் கொடுத்த தகவலின் பேரில் பொலிஸார் அவரைக் கைதுசெய்து கொண்டுபோய்விட்டார்கள். சடலம் அடக்கம் செய்யப்பட்டுவிட்டது.

இந்தச் செய்தியைப் படித்த போது எனக்கு இதேவிதமான ஒரு கருத்தை வைத்து எடுக்கப்பட்டிருந்த ஆங்கிலப் படமொன்றின் நினைவு வந்தது.

மிகவும் வசதியான குடும்பம். கணவனும் மனைவியும் உயிருக்கு உயிராய் இருக்கிறார்கள். ஒருவரைப் பிரிந்து ஒருவர் வாழ முடியாது என்ற அளவிற்கு அவர்களின் பாசம் இருந்தது. ஆனால், அந்த இளம் மனைவி நோய்வாய்ப்பட்டு இறந்துபோகிறாள். கணவனால் இதைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை. வீட்டுக்கு அருகாமையிலேயே உள்ள ஒரு கல்லறையில் மனைவியின் உடலை வைத்துப் பாதுகாக்கிறார். அந்தக் கல்லறையில் ஏதோ ஒரு நீராவி கசிந்து சடலத்தைக் கெடாமல் காக்கின்றது. அதனால், அப்பெண் ஏதோ நித்திரையில் இருப்பது போல் பலகாலம் இருக்கிறாள். கணவருக்கு வயதாகி விடுகிறது. ஆனால், அவள் முன்போலவே இளமையுடன் காணப்படுகிறாள்.

இந்த நிலைமையில், ஒரு தினம் அவரது நண்பர் ஒருவர் - இளைஞர் - அவரைப் பார்க்க வருகிறார். அவர் கேட்டுக்கொண்டதன்படி அங்கேயே தங்கியும் விடுகிறார். அதன் பேரில் ஒரு தினம் தனது மனைவியின் நிலை பற்றியும் அவள் உடலைத் தாம் பாதுகாத்து வருவது பற்றியும் கணவர் தம் நண்பருக்குக் கூறுகிறார்.

அததுடன் கல்லறைக்கு அழைத்துச் சென்று மனைவியின் உடலையும் காட்டுகிறார். இவர்கள் இருவரும் அடிக்கடி சென்று பார்த்து வரும வேளையில், மனைவி மெதுவாக உயிர்பெற்று வந்துவிடுகிறார். கணவருக்கு மிகுந்த மகிழ்ச்சியென்றாலும், அவரது இளம் நண்பருக்கு அவரது இளம் மனைவி மீது ஆசை பிறந்து விடுகின்றது. மனைவியும் தனது கிழம் கணவரை ஒதுக்கிவிட்டு இளைஞருடன் நெருங்கிப் பழகத் தொடங்குகிறார்.

இதனால் நண்பர்கள் இருவருக்குமிடையில் மோதல் ஏற்படுகின்றது. வாள்களை எடுத்துக்கொண்டு சண்டை செய்கிறார்கள். இறுதியில் இளைஞன் தன் வாளினால் நண்பரைக் குத்தி விடுகின்றான். குத்துண்ட கணவர் கீழே விழ இளைஞன் இனி அவரது மனைவியுடன் சல்லாபிக்கலாம் என்ற எண்ணத்தில் அவளிடம் நெருங்குகிறான்.

அந்தவேளை, சடலமாக விழுந்த கணவனின் உடலில் இருந்து அவரது ஆவி கிளம்பி மேலே உயர்கின்றது. இதற்காகவே காத்திருந்தது போல் மனைவியும் சடலமாகச் சரிய அவளது ஆவி பிரிந்து கணவனின் ஆவியுடன் சேர்ந்து விடுகின்றது.

அந்தவேளை அவள், தான் மேலுலகம் செல்லவேண்டிய காலம் வந்துவிட்டதால், தனது கணவனின் ஆவியோடுதான் செல்ல வேண்டும் என்ற ஆசையில் இளைஞனை விரும்புவது போல் காட்டி அவன்மூலம் கணவனின் உயிரைப் பிரிக்கச் செய்து இருவருமாக ஒன்றாகப் புறப்படுவதாகக் கூறுகிறாள்.

இது வெறும் படக்கதையாய் இருந்தாலும், இறந்தவர்கள் உயிர் பெற்று வரமாட்டார்களா என்ற ஆசையுள்ளவர்கள் இந்த நாகரிகக் காலத்தில் அதுவும் நாகரிகம் மிக்க அமெரிக்காவில் கூட இருக்கிறார்கள் என்பதை முதலில் கூறிய செய்தி காட்டுகிறது அல்லவா?

★ ★ ★

### விடாக்கண்டர்கள

மெக்ஸிக்கோவின் கன்கூன் நகரில் இடம்பெற்ற உலக வர்த்தக ஸ்தாபன மகாநாடு தோல்வியில் முடிந்தமைக்கு அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளும் விட்டுக்கொடுக்காமல் நடந்து கொண்டது தான் காரணம் என்று கூறப்படுகின்றது.

பிறேஸில், இந்தியா, சீனா ஆகிய நாடுகள் வளரும் நாடுகளின் சார்பில் முன்வைத்த கோரிக்கைகள் மிகவும் நியாயமானவை என்று கருதப்படுகின்றன.

வளர்ந்த நாடுகள் தமது விவசாயிகளுக்கு அளித்துவரும் அபரிமிதமான மானியங்கள் வளரும் நாடுகளின் விவசாயிகளைத் தலையெடுக்க முடியாமல் செய்துவிடுகின்றது. உலக சந்தையில் வளரும் நாடுகளின் விவசாயப் பொருட்கள் போட்டியிட முடியாத நிலையை ஏற்படுத்தி விடுகின்றது என்று அவர்கள் வாதிட்டனர்.

வளர்ந்த நாடுகள் தமது விவசாயிகளுக்கு அளித்துவரும் மானியங்களை நிறுத்தவேண்டும் அல்லது குறைக்கவேண்டும் என்ற கோரிக்கைக்கு வளர்ந்த நாடுகள் கொஞ்சமும் விட்டுக் கொடுக்கவில்லை. அதன் விளைவு மகாநாடு தோல்வியில் முடிந்தது.

# பெரியாரின் பெருமை

★ ★ ★

### பெரியாரின் பெருமை

ஈ.வே.இராமசாமிப் பெரியாரின் பிறந்தநாள் அண்மையில் கொண்டாடப்பட்டது. பெரியார் தமிழ்நாட்டில் பல சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தார். இன்று தமிழ் எழுத்துக்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள சீர்திருத்தங்களில் பலவும் பெரியாரால் அறிமுகப்படுத்தப்பட்டவை தான்.

பெரியார் தமது பத்திரிகை, பிரசுரங்களில் தமிழ் எழுத்துக்களில் சீர் திருத்தங்கள் செய்திருந்தார். அவைகளை எம்.ஜி.ஆர். பதவிக்கு வந்ததின் பின்னர் தமிழ் நாட்டில நடைமுறைக்குக் கொண்டு வந்தார்.

பெரியார் நாஸ்திகர். அதேசமயம் பிறர் நம்பிக்கைகள், மரபுகளுக்கு மதிப்புக்கொடுத்து வந்தார். அதேபோல் சில சமயங்களில் தமது கொள்கைகளை நிலைநாட்டுவதற்காக நகைச்சுவையாகவும், குறும்புத்தனமாகவும் சில பல காரியங்களைச் செய்தார்.

பெரியார் தம் செலவில் கட்டிய கல்லூரி விழாவொன்று நடைபெற்றது. அந்த விழாவுக்கு வந்தவர்கள் நன்கொடைகள் வழங்கினார்கள். தொழிலதிபர் ஜி.டி.நாயுடுவும் வந்திருந்தார். அவரும் நன்கொடை வழங்கினார்.

இறுதியில் நன்றி தெரிவித்துப் பேசியபோது, ''நாயுடு ஐயாவும் நன் கொடையாக ஒரு சதம் வழங்கியிருக்கிறார். - என்னை நையாண்டி பண்ணுவதாக அவர் நினைக்கலாம். ஆனால், அவருக்குத்தான் ஒருசதம் நட்டம் எனக்கு ஒரு சதம் இலாபம்'' என்றார்.

பெரியார் வடநாட்டுக்குப் போயிருந்தார். ஒரு தெருவில் அவர் நடந்து சென்றபோது, அவர் உருவத்தைப் பார்த்த அவ்வூர் மக்கள் அவரை ஒரு மடாதிபதி என்று நினைத்துவிட்டார்கள்.

தாடி, மீசை, கறுப்புச்சட்டை போதாக்குறைக்கு ஒரு சீடன் போன்று அறிஞர் அண்ணாவும் காணப்பட்டார். அந்த மக்கள் பெரியாரின் காலில் விழுந்து கும்பிட்டார்கள். அவர் ஒரு நாஸ்திகர் என்பது அவர்களுக்குத் தெரிந்திருக்கவில்லை.

பெரியாரின் வீட்டுக்கு ஒருநாள் தமிழ் அறிஞர் திரு வி.க.வந்து தங்கியிருந்தார். அடுத்தநாள் காலையில் திரு.வி.க. குளத்தில் குளித்து முழுகிக் கரை வந்த போது பெரியார் அவருக்காக விபூதிப்பெட்டி மற்றும் பொருள்களுடன் காத்திருந்தார்.

எழுத்தாளர் கல்கியின் மகள் திருமணம் நடந்தது. பெரியாருக்கும் அழைப்பு அனுப்பியிருந்தார்கள். ஆனால், பெரியார் போகவில்லை. அடுத்தநாள் வாழ்த்து சொல்வதற்காகக் கல்கி அவர்களின் வீட்டுக்குப் போயிருந்தார் பெரியார்.

''ஐயா நேற்று ஊரில் இல்லையோ'' என்று கல்கி விசாரித்தார்.

''இருந்தேன்- ஆனால், எனது கறுப்புச் சட்டையுடன் திருமண வீட்டிற்கு வந்து உங்களுக்கும்,மற்றவர்களுக்கும் சங்கடத்தை ஏற்படுத்தக் கூடாது என்பதற்காக வரவில்லை'' என்று விளக்கமளித்தார். பெரியார்.

அன்பன்

# செய்தித் துளிகள்

## கூட்டம்

(பருத்தித்துறை)

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் வடமராட்சிக் கிளையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று திங்கட்கிழமை பி.ப.3.00மணிக்கு பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறுமென கிளைச் செயலாளர் ஆர்.நாகேந்திரராஜா அறிவித்துள்ளார். (பி-52)

## கணனி நிலையம்

(கந்தரோடை)

மனிதவள கல்வி கலாசார அலுவல்கள் அமைச்சின் நிதிஒதுக்கீட்டில் மானிப்பாய் இந்துக்கல்லூரி மாணவர்களின் கணனித் தொழில்நுட்ப அறிவினை மேம்படுத்தும் முகமாக தேசிய கணனி நிலையம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இதன் முதற்கட்டமாக 20 கணனிகள் இக் கணனிக்கற்கை நிலையத்திற்கு வழங்கப்படவுள்ளன.(உ-103)

## மருந்துகள் அன்பளிப்பு

(பருத்தித்துறை)

வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையை நாடும் நோயாளர்களின் நலன் கருதி இவ்வைத்தியசாலைக்கு தனியார் ஒருவரால் மருந்து வகைகளும், பணமும் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

பொலிகண்டியைச் சேர்ந்தவாகளான டாக்டர் எஸ்.சின்னத்தம்பி சுமார் 25ஆயிரம் ரூபா பெறுமதியான மருந்து வகைகளையும், வல்லிபுரம்-சிவானந்தன் என்பவர் 10ஆயிரம் ரூபா நிதியையும் அன்பளிப்புச் செய்துள்ளனர். (பி-52)

## நிதி அன்பளிப்பு

(கந்தரோடை)

மானிப்பாய் இந்துக்கல்லூரிக்கு 20லட்சம் ரூபா அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

பழைய மாணவனும், தொழில் அதிபருமான அமரர் அதியரட்ணம் பேர்ச நினைவாக அன்னாரின் குடும்பத்தினர் இந்நிதியை மேற்படி கல்லூரிக்கு அன்பளிப்புச் செய்துள்ளனர்.

இந்நிதியைப் பயன்படுத்தி பாடசாலைக்குள நாடக அரங்கமொன்று அமைக்கப்படவுள்ளது.

(பி-103)

## மண்டபம்

## மர . நிழலில்கற்கும் மாணவர்கள்

(மருதங்கேணி)

அடிப்படை வசதிகள் ஏதுமற்ற நிலையில் முல்லை/முள்ளியவளை றோமன் கத்தோலிக்கப் பாடசாலை பெரும் சிரமங்களின் மத்தியில் இயங்கி வருகின்றது.

நிரந்தர கட்டட வசதிகள் ஏதுமற்று மரநிழலின் கீழ் மேற்படி பாடசாலையின் மாணவர்கள் தற்போது கல்விகற்று வருகின்றனர்.

அதேவேளை, மேற்படி பாடசாலையை இடமாற்றம் செய்வதற்குரிய நடவடிக்கைகளை நிக்கொட் நிறுவனம் முன்னர் மேற்கொண்டு வந்ததும், தற்போது அப்பணிகள் யாவும் இடைநிறுத்தப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (உ-35)

## அறுவடைக்கட்டத்தில் அழிவடையும் வெங்காயப்பயிர்

(நவக்கிரி)

அச்சுவேலி, ஆவரங்கால், சிறுப்பிட்டி, நவக்கிரி, குட்டியப்புலம், தென்மூலை ஆகிய பகுதிகளில் செய்கை பண்ணப்பட்டு அறுவடைக்குத் தயா ராகவிருந்த வெங்காயப் பயிர்கள் இனங்காண முடியாத நோய்த் தாக்கம் காரணமாக அழிவடைந்து செல்கின்றன.

இதுகுறித்து கமநலசேவை நிலையத்தில் விவசாயிகள் முறைப்பாடு செய்துள்ள போதிலும், ஏற்ற நடவடிக்கை எடுக்கப்படவில்லையென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(உ-233)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியால் பொதுமுகாமையாளர் பதவிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

மேற்படி பதவிக்குரிய விண்ணப்பங்களை எதிர்வரும் 7ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக தலைவர், வலிகாமம் பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கங்களின் கொத்தணி, மானிப்பாய் என்னும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்

## நிவாரணமுத்திரையின் அடிக்கட்டையை ஒப்படைக்குக!

(தொல்புரம்)

இம்மாதத்தில் விநியோகிக்கப்படவுள்ள 2003ஜூலை மாதத்திற்குரிய 117 ஏ,பி புள்ளிகளுக்கான நிவாரணத்தைப் பெற்றுக்கொண்ட பின்பு உடனடியாக முத்திரையின் ஏனைய மூன்று புள்ளிகளுடன் சேர்ந்த அடிக்கட்டையினை தங்கள் பிரிவு கிராமஉத்தியோகத்தரிடம் ஒப்படைத்தல் வேண்டும எனவும், இதன்படி முத்திரையை மீள ஒப்படைத்தவர்களுக்கு மட்டுமே 2003 ஆகஸ்ட் மாதத்தில் இருந்து 2003 டிசம்பர் மாதம்வரையான புதிய முத்திரை வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கிராம உத்தியோகத்தரால் அறிவிக்கப்படும் முடிவுத்திகதிக்குப் பிந்தாமல் யாவரும் தற்போது நடைமுறையில் உள்ள முத்திரையை தத்தமது கிராம சேவையாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும. தாமதிக்குமிடத்தில் உரிய காலத்தில் நிவாரணம் பெறுவதில் சிரமம் ஏற்படும் என வலி.மேற்கு பிரதேச செயலர் மு.சிவராசா தெரிவித்துள்ளார்.

(உ-70)

## அதிகளவு முறைப்பாடுகள் பதிவு

(கொழும்பு)

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவில் அதிகளவு முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டு வருகின்றன.

இம் முறைப்பாடுகள் யாவும் பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராகவே செய்யப்பட்டு வருவதாக ஆணைக்குழுவின் தலைவரும், ஜனாதிபதியின் சட்டத்தரணியுமான ரஞ்சித அபயசூரிய தெரிவித்துள்ளார்.

இவற்றில் உயர் பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக சாதாரண பொலிஸ் அதிகாரிகள் செய்துள்ள முறைப்பாடுகளும் அடங்கும்.

(தி-61)

## மீனவ அபிவிருத்திவங்கி

(கொழும்பு)

மீன்பிடிக் கைத்தொழிலை அபி

# பாடசாலை முன்னேற்றத்துக்கு பெற்றோர் உதவி அவசியம்

## உடுவில் கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர்

(கந்தரோடை)

பாடசாலைகளின் முன்னேற்றத்திற்கு எப்போதும் பெற்றோரின் பங்களிப்பு அவசியமானதாகும். அதன் சகல வளர்ச்சிகளுக்கும் பெற்றோர், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகளைத் தொடர்ந்து பாடசாலையின் அதிபர், ஆசிரியர்களும் பூரண ஒத்துழைப்பு நல்க வேண்டும். அப்போதுதான் பாடசாலைகள் சகல கல்வித்துறைகளிலும் முன்னேற்றமடையும் என உடுவில் கல்விக்கோட்ட உதவிக்கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதன் தெரிவித்தார்:

சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாலய அதிபர் பொ.கணேஸ் வரலிங்கம் தலைமையில் நடைபெற்ற பாடசாலையின் பரிசளிப்பு நிகழ்வில், பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும்போது இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், பாடசாலைகளில் நல்லொழுககம் நிலவ வேண்டுமாயின் அதனை சமுதாய மட்டத்தில் முதலில் ஏற்படுத்தப்பட வேண்டும். அதற்கு சமுதாயத்திலுள்ள புத்திஜீவிகளும், சமய சமூகப் பெரியோரும் ஆவன செய்ய வேண்டும். அப்போதுதான் சமுதாய முன்னேற்றத்திற்கு பங்களிக்கக்கூடிய நற்பிரஜைகளை உருவாக்க முடியும்.

சமுதாய மட்டத்தில் ஒழுக்க நெறிமுறைகளையும், கலாசாரப் பணபாடுகளையும் பேணிப் பாதுகாக்க நல்ல ஒழுங்கமைப்புக்கள் ஏற்படுத்தபபட வேண்டும் எனவும் குறிப்பிட்டார். அத்தோடு பாடசாலையின் பல்வேறு தேவைகளுக்கும் உதவி புரிவதாகவும் உறுதியளித்தார்.

இந்நிகழ்வில் இளைப்பாறிய மாவட்ட நீதிபதி மு.திருநாவுக்கரசு உட்பட பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். (தி-103)

# இலங்கையை மீளக் கட்டியெழுப்ப ஐரோப்பிய ஒன்றியம் உதவும்

## தலைவர் பிராங்கோ ரணிலிடம் உறுதி

(நியூயோர்க்)

இலங்கையை மீளக் கட்டியெழுபபவும், தற்போதைய சமாதானச் செயறபாடுகளை முன்னெடுக்கவும் தமது பூரண ஆதரவை வழங்குவதாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் ஐரோப்பிய ஒன்றியத் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த வெள்ளியன்று பிரதமர் நியூயோர்க்கில் இவர்களைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியிருந்தார். ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைவர் பிராங்கோ இதன் அடுத்த தலைவர், அயர்லாந்தின் வெளிநாட்டமைச்சர் பிரெய்ன் கொவன், வெளியுறவு ஆணையாளர், விசேட பிரதிநிதி ஐவெயர் சொலனா ஆகியோரையும் பிரதமர் சந்தித்துள்ளார்.

இலங்கையில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை அமுலாக்குமாறும், போர்நிறுத்தக கண்காணிப்புக் குழுவினரை இன்னும் பலப்படுத்தும்படியும் இவர்கள் பிரதமரைக் கேட்டுக்கொண்டனர். (இ)

## வாரத்தில் 5 தினங்கள்

# வட்டு. மத்திய மருந்தகம் மாலை வேளையில் இயங்கும்

(சுதுமலை)

வட்டுக்கோட்டை மத்திய மருந்தகம் இன்று திங்கட்கிழமை முதல் தொடர்ந்து வாரத்தில் 5நாட்கள் மாலை வேளைகளில் இயங்கவுள்ளது.

தில் காலையில் கடமையாற்றி வரும் வைத்திய அதிகாரியே மேற்படி மருந்தகத்தில் மாலை நேரங்களில் பணியாற்றவுள்ளார்.

இதேவேளை, பண்டத்தரிப்பு

மானிப்பாய் இந்துக்கல்லூரிக்கு 20லட்சம் ரூபா அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

பழைய மாணவனும், தொழில் அதிபருமான அமரர் அதியரட்ணம் பேர்ச நினைவாக அன்னாரின் குடும்பத்தினர் இந்நிதியை மேற்படி கல்லூரிக்கு அன்பளிப்புச் செய்துள்ளனர்.

இந்நிதியைப் பயன்படுத்தி பாடசாலைக்குள நாடக அரங்கமொன்று அமைக்கப்படவுள்ளது.

(பி-103)

## மண்டபம் புனரமைப்பு

(சுழிபுரம்)

சுழிபுரம் கிழக்கு வீரபத்திரர் ஆலயததின் முன் மண்டபம் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றது.

கடந்த 24ஆம் திகதி ஆரம்பமாகிய மேற்படி புனரமைப்புப் பணிகள் இன்னும் ஓரிரு நாட்களில் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (பி-71)

## நெற்செய்கை ஊக்குவிப்புக் கடன்

(கந்தர்மடம்)

பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுவுச்சங்கத்தின் உறுப்பினர்களுக்கு நெற்செய்கை ஊக்குவிப்புக் கடன்கள் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்தவாரம் சங்கத் தலைவர் வி.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இயக்குநர்சபைக் கூட்டத்திலேயே இதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டது. (உ-85)

## அமெரிக்கத் தூதராக புதியவர்

(கொழும்பு)

இலங்கைக்கான புதிய அமெரிக்கத் தூதராக ஜெப்றி ஜேலுன்சன் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த ஜூலை மாதம் 28ஆம் திகதி இலங்கையினதும், மாலைதீவினதும் தூதராகப் பதவிப்பிரமாணம் செய்துகொண்ட இவர், தனது நியமனக் கடிதத்தை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் கடந்த வெள்ளியன்று கையளித்தார்.

1977ஆம் ஆண்டு தொடக்கம் வெளிவிவகார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் இவர் இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய நாடுகளிலும் கடமையாற்றியுள்ளார்

(தி)

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியால் பொதுமுகாமையாளர் பதவிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

மேற்படி பதவிக்குரிய விண்ணப்பங்களை எதிர்வரும் 7ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக தலைவர், வலிகாமம் பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கங்களின் கொத்தணி, மானிப்பாய் என்னும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (உ-18)

## கோரிக்கை

(காரைநகர்)

சங்கானை பிரதேச செயலர் பிரிவில் புதிதாக அமைக்கப்படவுள்ள சமுர்த்தி மகாசங்கக் கட்டடம், சங்கானை பிரதான வீதியிலேயே அமைக்கப்படவேண்டுமென காரைநகர் சமுர்த்திவங்கி முகாமையாளருக்கு காரைநகர் பிரதேச மகாசங்க உறுப்பினர்கள் கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளனர்.

மேற்படி மகா சங்கத்தின் உறுப்பினர்களாக பிரதேச செயலர் பிரிவு ரீதியாக காரைநகரில் 4பேரும், சங்கானையில் 8பேரும், சண்டிலிப்பாயில் 9பேரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், காரைநகர் மற்றும் சண்டிலிப்பாய் பிரதேசங்களுக்கு இடைப்பட்ட பகுதியில் சங்கானைப் பிரதேசம் இருப்பதால், பொதுவாக உள்ள இந்தப் பிரதேசத்தில் சமுர்த்தி மகாசங்கத்தை உருவாக்க வேண்டும். இதனால் இப்பகுதிகளுக்கு உட்பட்ட 5சமுர்த்தி வங்கிகளையும் நிர்வகிப்பது இலகுவாக இருக்கும் என அக்கோரிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(உ-246)

## தேசிய பொழுதுபோக்கு நிலையம்

(கொழும்பு)

சீன அரசாங்கத்தின் உதவியுடன் தேசிய பொழுதுபோக்கு நிலையம் ஒன்றை அமைக்க கல்வி கலாசார மனிதவள அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கான உடன்படிக்கையில் சீனஅரசும், இலங்கை அரசும் அண்மையில் கொழும்பில் வைத்து கைச்சாத்திட்டுள்ளன.

(பி-60,10)

செய்யப்பட்டு வருவதாக ஆணைக்குழுவின் தலைவரும், ஜனாதிபதியின் சட்டத்தரணியுமான ரஞ்சித அபயசூரிய தெரிவித்துள்ளார்.

இவற்றில் உயர் பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக சாதாரண பொலிஸ் அதிகாரிகள் செய்துள்ள முறைப்பாடுகளும் அடங்கும்.

(தி-61)

## மீனவ அபிவிருத்திவங்கி

(கொழும்பு)

மீன்பிடிக் கைத்தொழிலை அபிவிருத்தி செய்யும் பொருட்டு, மீனவ அபிவிருத்தி வங்கி ஒன்றை அமைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாக மீன்பிடிக் கைத்தொழில் அமைச்சர் மகிந்த விஜயசேகர கடந்த வெள்ளியன்று பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

இத் துறையில் ஏறபட்டுள்ள நிதிச் சிக்கல்களைத் தவிர்க்கும் பொருட்டும், அரசாங்க நிதி ஒதுக்கீடுகள் போதுமானதாக இல்லாமையாலுமே இவ் வங்கியை ஆரம்பிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். (தி-61)

## விபத்தில் படுகாயம்

(ஆனைப்பந்தி)

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் உள்ள விக்னா கல்வி நிலையத்திற்கு முன்பாக நேற்று முன்தினம் மோட்டார் சைக்கிள் ஒன்றும் எல்வ் வாகனமும் விபத்துக்குள்ளாகியதில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

ஆரியகுளம் சந்தியில்இருந்து ஸ்ரான்லி வீதியூடாகச் சென்று கொண்டிருந்த மோட்டார்சைக்கிளுடன் எதிரே வந்த எல்வ் வாகம் மோதியதில் மோட்டார் சைக்கிளில் சென்ற புத்தூரைச் சேர்ந்த 55வயது மதிக்கத்தக்க நபரே பலத்த காயங்களுககுள்ளாகியுள்ளதாகத் தெரியவருகின்றது.

கையிலும், காலிலும் பலத்த காயங்களுக்குள்ளாகிய மேற்படி நபர், யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (பி-109,72)

ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைவா

னா.

(இ)

## வாரத்தில் 5 தினங்கள் வட்டு. மத்திய மருந்தகம் மாலை வேளையில் இயங்கும்

(சுதுமலை)

வட்டுக்கோட்டை மத்திய மருந்தகம் இன்று திங்கட்கிழமை முதல் தொடர்ந்து வாரத்தில் 5நாட்கள் மாலை வேளைகளில் இயங்கவுள்ளது.

இம் மருந்தகம் கடந்த காலங்களில் வாரத்தில் இருநாட்களில் (செவ்வாய், வெள்ளி) மட்டுமே மாலை நேரங்களில் இயங்கி வந்தது.

இளவாலை மத்திய மருந்தகத்தில் காலையில் கடமையாற்றி வரும் வைத்திய அதிகாரியே மேற்படி மருந்தகத்தில் மாலை நேரங்களில் பணியாற்றவுள்ளார்.

இதேவேளை, பண்டத்தரிப்பு கிராமிய வைத்தியசாலையில் கடமை புரியும் வைத்திய அதிகாரியே தொல்புரம் அரசினர் வைத்தியசாலையில் மாலையில் கடமையாற்றி வருகிறார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

(உ-252)

## சுற்றாடல் சுகாதாரத்தைப்பேண — அரச அதிபர் நடவடிக்கை —

(சுதுமலை)

யாழ்.மாவட்டதில் சுற்றாடல் சுகாதார நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்வதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகளை யாழ். அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் மேற்கொண்டுள்ளார்

இது தொடர்பாக யாழ்.மாவட்டத்தில் உள்ள நகரசபை மற்றும் பிரதேச சபைகளின் செயலாளர்களிற்கும், யாழ்.மாநகரசபை ஆணையாளருக்கும் அவசர கடிதம் ஒன்றையும் அவர் அனுப்பிவைத்துள்ளார்.

மனிதக்கழிவுகளை அகற்றுதல், குப்பை கூழங்களை அகற்றுதல், கழிவுநீர் வாய்க்கால்களை சுத்தம் செய்தல், மக்களிற்கு சுத்தமான குடிநீரை வழங்குதல் போன்ற விடயங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக மாவட்ட ரீதியில் அவசர திட்டம் ஒன்று விரைவில் தயாரிக்கப்பட உள்ளது.

எனவே, இவ்விடயங்களில் உள்ளூராட்சி மன்றங்கள் விசேட கவனம் செலுத்தி, இது தொடர் பான விபரங்களை யாழ்.செயலகத் திற்கு அனுப்பிவைக்குமாறு அக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (தி-252)

## தமிழீழ சுகாதாரத் துறையின் முயற்சிக்கு கைமேற்பலன்

(பளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் மலேரியா நோயின் தாக்கம் தற்போது வெகுவாகக் குறைந்துள்ளதாக தமிழீழ சுகாதாரத்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மலேரியா நுளம்பு பெருகும் இடங்களை இனங்கண்டு அழித்தல், அதுபற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தல் ஆகிய செயற்பாடுகளில் தமிழீழ சுகாதாரத்துறையினர் ஓயாது ஈடுபட்டதன் மூலமே இந் நோயின் தாக்கம் குறைந்திருப்பதாகவும், இதனால் வைத்தியசாலைகளில் மலேரியாக் காய்ச்சலுககுள்ளாகி சிகிச்சைபெற வரும் நோயாளர்களின் எண்ணிக்கையும் வெகுவாகக் குறைந்திருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

(உ-97)

# மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகோட

# அடுத்த இராணுவத் தளபதியாக வாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

அடுத்த இராணுவத் தளபதியாகும் வாய்ப்பு மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகொடவுக்கு இருப்பதாக இராணுவ ஆய்வாளர்கள் ஊகம் வெளியிட்டுள்ளனர்.

இராணுவத் தளபதி பதவியில் இருந்து லெப். ஜெனரல் லயனல் பலகல்ல டிசெம்பர் மாதத்துடன் ஓய்வுபெற்றுச் செல்லவுள்ளதால் அடுத்த இராணுவத் தளபதி யார்? என்ற கேள்வி பலமாகவே எழுந்துள்ள நிலையில், இப்போதுள்ள நிலைவரங்களின்படி சாந்த கொட்டேகொடவுக்கே இந்த வாய்ப்பு அதிகம் இருப்பதாகக் கூறப்படுகின்றது.

இதேவேளை, அடுத்த இராணுவத் தளபதி, இலங்கை இராணுவத்தின் 3ஆவது நிலை அதிகாரியாக இருந்த பிரதித் தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் அன்ரன் விஜேந்திராவே என்று கருதப்பட்டு வந்தது.

இருந்த போதிலும், 55 வயதைப் பூர்த்திசெய்த நிலையில் கடந்த ஓகஸ்ட் மாதம் 31 ஆம் திகதியுடன் இவர் ஓய்வு பெற்றுச் சென்றுள்ளார்.

அத்துடன், 33 வருடங்கள் இராணுவத்தில் பணியாற்றிய இவருக்கு சேவை நீடிப்பு வழங்கப்படும் என எதிர்பார்த்த போதிலும், அதுவும் இடம்பெறவில்லை.

இந்த நிலையில், இராணுவத்தில் 2ஆவது நிலையில் உள்ள அதிகாரியும், அடுத்து இராணுவத் தளபதி பதவிக்கு சிபார்சு செய்யும் தகுதியில் உள்ளவருமான இராணுவத் தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் லொகான் குணவர்த்தன எதிர்வரும் நவம்பர் மாதம் 22ஆம் திகதியுடன் ஓய்வுபெற்றுச் செல்லவுள்ளார்.

இதையடுத்து, தற்போதைய அரசுக்கு மிகவும் நம்பிக்கைக்குப் பாத்திரமானவரும், இராணுவத்தில் கடும் போக்குள்ளவர் என்று அடையாளம் காணப்படாதவருமான சாந்த கொட்டேகொடவுக்கு இராணுவத் தளபதியாகும் வாய்ப்பு நிறையவே இருப்பதாகக் கூறப்படுகின்றது.

மூத்த படையதிகாரிகள் பலர் இருந்தபோதும், அரசு புலிகள் இடையிலான சமாதானப் பேச்சுக்களில் பாதுகாப்பு விவகார உப குழுவின் பிரதிநிதியாகவும், பேச்சுவார்த்தைக் குழுவின் ஆலோசகராகவும் இவரைப் பங்கேற்க வைத்தமை, அரசுக்கு இவர் மேலுள்ள நம்பிக்கையின் ஒரு வெளிப்பாடே எனப் பலரும் கருத்து வெளியிட்டுள்ளனர். (உ)

## மாணவர் தலைமைத்துவ

## பயிற்சிப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

சர்வதேச சிறுவர் தினத்தை முனனிட்டு எதிர்வரும் முதலாம் திகதி புதன்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ்.கன்னாதிட்டியிலுள்ள மக்கள் வங்கி பிராந்தியத் தலைமையகக் கேட்போர் கூடத்தில் மாணவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சிப்பட்டறை ஒன்று நடத்தப்படவுள்ளது.

மக்கள் வங்கியின் யாழ். பிராந்திய முகாமையாளர் மு.க.சிவபாதவிருதயர் தலைமையில் இடம் பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருநதினராக யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார்.

வரவேற்புரையை மக்கள் வங்கியின் உதவிப் பிராந்திய முகாமையாளர் க.ஆனந்தராஜா நிகழ்த்தவுள்ளார்.

தொடர்த்து முன்னாள் கல்விப்பணிப்பாளர் கோ.சி.வேலாயுதம் ,அகவொளி இயக்குநர் அருட்திரு எஸ்.இ.இராஜநாயகம், உளவளத்துணையாளர் வைத்திய கலாநிதி ஆர்.சிவசங்கர், யாழ்.பல்கலைக்கழக சமூகவியல் துறைப்பீடாதிபதி கலாநிதி என்.சண்முகலிங்கன், யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர்.ஏ. விமலேந்திரன் ஆகியோர் கருத்துரைகளை வழங்கவுள்ளனர். (உ)

## வங்கிக்கடனாகப் பெற்ற

# 1200 கோடி நிதியை வசூலிக்க

# அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்

## பொ.ஐ.மு.பா. உ. கோரிக்கை

(கொழும்பு)

வங்கிகளில் இருந்து கடன் பெற்ற 103 முக்கிய நபர்கள் ஆயிரத்து 200 கோடி ரூபாவை மீளச் செலுத்தாமல் உள்ளனர் என பொதுஜன ஐக்கிய முன்னணிப் பாராளுமன்ற உறுப்பினர் திலின பண்டாரநாயக்க குற்றம் சாட்டியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், மக்கள் வங்கி இலங்கை வங்கி என்பனவற்றில் இருந்து பெருமளவு நிதியினை கடனாகப் பெற்ற நூற்றுக்கணக்கான அரசியல்வாதிகள் இன்னமும் தமது கடன்களை மீளச் செலுத்தவில்லை.

ஆனால் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் இவர்களுக்கு எதிராக எதுவித நடவடிக்கையினையும் மேற்கொள்ளாது பொதுமக்கள் பெற்ற கடன்களை வசூலிக்க நடவடிக்கை எடுத்து வருகிறது. இது கண்டிக்கப்பட வேண்டிய விடயமாகும்.

அரசின் இந்தச் செயல்களுக்கு காரணமும் உள்ளது. வங்கிகளில் இருந்து இவ்வாறு பெருந்தொகையான கடன்களைப் பெற்றவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பதை வங்கிகளின் பதிவேடுகள் காட்டுகின்றன.

அத்துடன், இவ் இரு வங்கிகளுக்கும் ஏற்படுகின்ற இழப்பீடுகளை ஈடுசெய்ய அரசாங்கம் வங்கிகளைத் தனியார் மயப்படுத்த திட்டமிட்டு வருவதாகவும் குற்றம் சாட்டினார்.

இதற்கிடையில்,அரசாங்க வங்கிகளில் நிலவும் நிதி மோசடிகள் குறித்து ஆராய ஆணைக்குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும் என பொதுஜன ஐக்கிய முன்னணிப் பாராளுமன்ற உறுப்பினர் சரத் அமுனுகம பாராளுமன்றத்தில் கோரிக்கை விடுத்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. (தி)

## கோழிக்குஞ்சு விநியோகம்

(கந்தர்மடம்)

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட மெலிஞ்சிமுனைக் கிராம 15 விதவைகளுக்கு தலா 16 கோழிக்குஞ்சுகள் வீதம் பட்டினிக்கெதிரான நிறுவனம் வழங்கியுள்ளது.

இந்நிறுவனம் கோழி வளர்ப்பு கருதி தேவையான கூடு,மாஸ், மருந்துவகைகள் என்பனவற்றையும் இலவசமாக வழங்கியுள்ளது.(தி-112)

## கணனிக் கல்வி

(நவாலி)

யா/சென் ஜோன்ஸ் கல்லூரியில் தரம் 6முதல் க.பொ.த. உயர்தரம் வரையிலான பாடசாலை மாணவர்களுக்கு கணனிக் கல்வி போதிக்கப்பட்டு வருகிறது. இதற்கென நிரநதரமாக 3 ஆசிரியர்கள் நியமிக்கப்படுள்ளனர். (தி-102)

## ஜே.வி.பி.அரசுக்கு அழுத்தம்

(கொழும்பு)

தொழிற்சங்கங்களுடன் பேச்சுக்களை நடாத்தி தற்போதைய சுகாதாரத் துறை வேலைநிறுத்தத்தை உடனடியாக முடிவுக்கு கொண்டு வருமாறு ஜே.வி.பி.அரசாங்கத்தை வலியுறுத்திக் கேட்டுள்ளது.

அனைவராலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வு ஒன்றை எடுப்பதற்கான முயற்சிகள் எதுவுமின்றி, இந்நெருக்கடியை இழுத்தடிப்பதன் மூலம் அரசாங்கம் நோயாளர்களை மேலும் வேதனைப்படுத்துகிறது என ஜே.வி.பி.யின் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார். (உ-6)

# கல்வி வளர்ச்சியில் கத்தோலிக்க திருச்சபையின் பங்கு அளப்பரியது

## யாழ்.வலயக்கல்விப்பணிப்பாளர் தெரிவிப்பு

(கொய்யாத்தோட்டம்)

யாழ்.குடாநாட்டின் கல்வி வளர்சசிக்குக் கத்தோலிக்கத் திருச்சபை ஆற்றிய பங்கு மிக முக்கியமானது தமிழுக்கும்,கல்வி வளர்ச்சிக்கும் கத்தோலிக்க சமயம் ஆற்றிய பங்களிப்பும் மிகப் பெறுமதியானது. இதை எவராலும் மறுக்க முடியாது.

இவ்வாறு யாழ்.கன்னியர் மடம் மகாவித்தியாலயத்தில் அண்மையில் இடம்பெற்ற யாழ்.கல்விவலய கத்தோலிக்க பாட ஆசிரியர்களுக்கான கருத்தரங்கில் கலந்து கொண்ட யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் பி.விக்கினேஸ்வரன் உரையாற்றுகையில் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்தும் அங்கு உரையாற்றுகையில், சமயக் கல்வியை முன்னெடுத்துச் செல்லும் நாடுகளில இலங்கை முக்கியமான இடத்தைப் பெறுகின்றது. இங்குள்ள அனைத்து சமூகங்களின் சமய விழுமியங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் அரசு பாடசாலைகளில் சமயக் கல்வியைப் புகட்டி வருகின்றது.

இதனடிப்படையில்,பாடசாலைகளினூடாக மாணவர்களுக்கு சமய விழுமியங்களைப் போதிக்கும் மிகப் பெரிய கடமைப்பாடு ஆசிரியர்களுக்கே உண்டு. அந்தவகையில், கத்தோலிக்க ஆசிரியர்கள் அனைவருமதத்தமது பொறுப்புகளை உணர்ந்து நல்ல முறையில் மாணவர்களிடையே சமய மற்றும் கலாசார விழுமியங்களைப் போதிக்க வேண்டும் என்றார்.

மேற்படி,கருத்தரங்கில்,கத்தோலிக்க சமய பாடத்திற்குப் பொறுப்பான உதவிக் கல்விப் பணிப்பாளர் வீ.சி.ஐ.பெரேரா மற்றும் வள ஆளணியினராக அருட்சகோதரர் எஸ்.காந்தன், பி.திருஞானசீலன், யாழ்.மறைக் கல்வி நடுநிலையகப் பொறுப்பாளர் வண.மௌலீஸ் அடிகளார் ஆகியோரும் கலந்து கொண்டனர். (உ-53)

# நவராத்திரி பாமாலை

## நான்காம் நாள்



### நிறையப் பாடுவேன்

மணக்கும் மலரை சூட்டுவேனே
மனம் நிறையப் பாடுவேனே
பணத்தை அள்ளி அருள்வாயே
என்றும் தாமரையில் இருப்பவளே

நா.சிந்துஜன்
யா/யூனியன் கல்லூரி

### மலரினால் வழிபட்டோம்

மலரினில் இருக்கின்ற இலக்குமியே
மலரினால் வழிபட்டோம் அம்மையே
உலகெலாம் செல்வங்கள் நிறைந்திடவே
பல பாடல் நாம் பாடி துதிக்கின்றோம்

கே.யாழினி
புலோலி. அ. த. க. பா.

### நீ சிரித்தால் எம்தேசம் செல்வபுரமாகும்

போரோய்ந்து பொழுது அமைதியாய் மலருதம்மா
புதுயுகமொன்று தமிழருக்கு மலர வேண்டுமம்மா
ஆரோடு நோவோம் ஆர்க்கெடுத்து உரைப் போமம்மா
ஆண்டாண்டாய் அநுபவித்த துயரமதை
-தீர்த்திடவேண்டும்
சீரோடு பொலிந்த செல்வமெலாம் அழிந்ததம்மா
சீதேவி மகாலட்சுமியே நீயொருக்கா சிரித்திடம்மா
பார்மேவும் செல்வபுரமாக எம்தேசம் சிறக்குமம்மா
பட்டினி தீர்ந்து பாங்கான வாழ்வோங்குமம்மா

செல்வி செ.சுதர்சனா தரம்10A
யா/கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்

### மகாலட்சுமி அம்மாவுக்கோர் மடல்

செல்வபுரத்து சீமாட்டியே
சின்னவள் நான் எழுதுவது
வல்லமை இழந்து தவிக்கின்றோம்-உன்
வசந்தம் எம்மைச் சேராதா?
''இல்லாமை''யால் எம் தேசம் தவிக்குதம்மா
இலட்சோப இலட்சம் தேவையம்மா
நல்லருள் செய்து காத்திடம்மா
நாடும் நாமும் வளம் பெறுவோம்

செல்வி துஷ்யந்தி தனபாலசிங்கம்
யா/இந்து ஆரம்ப பாடசாலை

### வரம்வேண்டி நிற்கின்றோம் எங்கள் தாயே

நல்வரங்கள் தந்திடம்மா நாயகியே
நலம்நாடி தினமுனையே வேண்டுகின்றோம்
செல்வமது தழைத்தோங்க வேண்டுமம்மா
சீர்பிறக்க நாம்வாழ வேண்டுமம்மா
தொல்லையெல்லாம் நீங்கிடவே செய்திடம்மா
தொழுகின்றோம் எந்நாளும் சோதனையேன்
வல்வினைகள் நீங்கிடவே காத்திடம்மா
வரம்வேண்டி நிற்கின்றோம் எங்கள் தாயே

ஜெ.அனோஜி தரம்10
யாழ். திருக்குடும்பக் கன்னியர் மடம்

## இன்று ஒரு தகவல்

# கொள்கை

பகுத்தறிவுப் பகலவன் பெரியார் என்று அவரைப் பாராட்டுவார்கள்! ஏனென்றால் சமுதாயத்தில் பல பகுத்தறிவுக் கருத்துக்கள் மலர்வதற்குப் பெரியார் காரணமாக இருந்தார். அவரது உண்மையான தொண்டு தான் சமுதாயப் புரட்சிக்கே காரணம். அந்த சமுதாயப் புரட்சியினால் விளைந்த நன்மைகள் எல்லாம் நாம் அறிந்தவையே .

இப்படிப்பட்ட சிறப்புக்களையுடைய பெரியார் ஆரம்ப காலங்களில் மகாத்மா காந்தியின் கொள்கைகளில் மிகவும் ஈடுபாட்டுடன் இருந்தவர். காந்தியக் கொள்கைகளில், மது ஒழிப்பில் தீவிரமாக இருந்தவர். அவற்றில் தீவிரமான பிரசாரங்களில் ஈடுபட்டவர். காந்தி அடிகள் கூறிய கதர் ஆடைகளையே அணிய வேண்டும் என்ற சித்தாந்தத்தையும் தீவரமாகப் பின்பற்றியவர்.

பெரியார் என்ன செய்வார் என்றால் கதர் ஆடைகளை ஒரு மூடையாகக்கட்டி விற்பனை செய்வாராம். அந்த ளவுக்கு அவற்றில் ஈடுபாடு கொண்டு விளங்கினார். அந்தக் கதர் ஆடைகளின் பெருமைகளை அடுத்தவர்களுக்குக் கூறுவது காந்தீயத்தின் பெருமைகளைக் கூறுவது, கதர் ஆடைகளை விற்பனை செய்வது போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்தவருக்கு என்ன எண்ணம் தோன்றியது என்றால், மற்றவர்கள் கதர் ஆடை அணிவதை நாம் தூண்டி விட்டுக்கொண்டிருக்கின்றோமே! நானும் எனது வீட்டில் உள்ளவர்களும் கதர் ஆடை கட்ட வேண்டும் அல்லவா? என்று நினைத்தாராம். ஏனென்றால் இது தான் உண்மையான ஓர் தலைவருக்குள்ள குணம்.

பிரசாரம் செய்து கொண்டு அவற்றை மற்றவர்களுடன் விட்டுவிடக்கூடாது. நாமும் அவற்றைப்பின் பற்ற வேண்டும். பெரியார் தான் கதர் ஆடை அணிந்தது மட்டுமல்லாமல் தனது மனைவியைப் பார்த்து ஒரு நாள் "நீ இனிமேல் கதர் புடைவைகளைத்தான் அணிய வேண்டும்!" என்று கூறினாராம். மனைவியோ தன்னால் முடியாது என்றாராம். காரணம் என்னவென்று கேட்டால் கதர் ஆடை மிகுந்த கனமாக இருக்கும். அதனை எப்படி உடலில் கட்டிக்கொண்டிருப்பது? என்று கேட்டிருக்கின்றார். இவரும் இங்கிதமாக இன்னும் கூறிப் பார்த்திருக்கின்றார் . "ஒரு கொள்கையைப் பரப்பும்பொழுது அதனை நாமும் பின்பற்ற வேண்டும். அதனால் நீயும் கதர் புடைவை கட்டுவது தான் சரியானது" என்றாராம். இவர் மற்றவர்களைப் போன்று நீ கட்டியே ஆக வேண்டும் என்று கண்டிப்பவர் அல்ல .பெண்களுக்கு சம உரிமை கொடுக்க வேண்டும். அவர்களைப் பெருமைப்படுத்த வேண்டும் என்று நினைப்பவர் அல்லவா. அதனால் நயந்து கூறினார். மனைவியும் மிக்க உறுதியுடன் மறுத்து வந்தார்.

இதன்போது பெரியார் ஒரு தந்திரம் செய்தாராம்.ஒரு தராசை வாங்கிவரச் செய்தார். வாங்கியாயிற்று. மனைவியிடம் கூறினார் இப்படி. "நமது திருமணத்திற்கு வாங்கிய கூறைப் புடைவையைக் கொண்டுவா" என்று சொன்னார். மனைவியும் கொண்டு வந்தார். பெரியார் பட்டுப்புடைவையை ஒரு தட்டிலும் கதர் புடைவையை மறுதட்டிலும் வைத்தாராம்.அப்போது அந்தப் பட்டுப் புடைவை வைத்த தட்டுத்தான் கனம் தாங்க முடியாது கீழே இறங்கியிருக்கிறது.அப்போது அவர் மனைவியிடம் "பார்த்தாயா! கதர் புடைவையை விட பட்டுப்புடைவைதான் பாரமானது! அதனை வாங்கிப் பீரோவுக்குள் வைத்து விட்டுக் கதர் புடைவையைப் பாரம் என்று கூறுகின்றாயே!" என்றார். உண்மையை உணர்ந்து கொண்ட அவரும் பின் கதர் ஆடையை அணிந்தாராம்.

இப்படித்தான் பிரசாரம் செய்பவற்றையே தானும் நடைமுறைப்படுத்தவேண்டும் என்ற தலைமைப் பண்பு பெரியாரிடம் இருந்தது. இவர் மிகுந்த மனிதாபிமானச் சிந்தனை மிக்கவர். மூதறிஞர் ராஜாஜிக்கும் பெரியாருக்கும் கொள்கை ரீதியிலான வேறுபாடுகள் இருந்தாலும் இருவருக்குமிடையில் நட்புறவும் உண்டு. அந்தளவு மனிதாபிமானத்துடன் இருவரும் பழகியுள்ளனர். கொள்கை மோதல்கள் ஒரு பக்கம் இருந்தாலும் மனித உறவே நிலையானது என்பதில் இரண்டு தலைவர்களுமே மிக்க பிடிப்புடன் இருந்தார்கள்.

பெரிய பகுத்தறிவுச் சிந்தனையுடன் இருப்பார் என்பதற்கு ஒரு அற்புதமான உதாரணம். ஒரு விழாவில் சிறுகுழந்தையொன்றுக்குப் பெயர் வைக்கச் சொன்னார்களாம் பெரியாரை . அப்போது பெரியார் அந்தக் குழந்தைக்கு "ரஷ்யா" என்று வைத்தாராம். என்ன இது ஒரு நாட்டின் பெயரை குழந்தைக்கு வைத்திருக்கின்றார் என்று மற்றோர் எல்லோரும் கேட்டார்களாம். அதற்குப் பெரியார் கூறினாராம். "நீங்கள் ஊரின் பெயரை பிள்ளைகளுக்கு வைப்பதில்லையா? திருப்பதி, சிதம்பரம்,பழனி என்று பெயர் வைக்கின்றீர்கள்.ஊரின் பெயரை வைக்கும்போது நாட்டின் பெயரை வைக்கக் கூடாதா?" என்றாராம் இவர்.

*இளசை எஸ்.சுந்தரம்*

# பிரதமரின் சமாதான முன்னெடுப்புக்களுக்கு ஐ.நா. செயலாளர் கோபி அனான் பாராட்டு

(நியூயோர்க்)

மிகவும் சிக்கலானதும் சவால்களைக் கொண்டதுமான சமாதான நடவடிக்கைகளை பிரதமர் ரணில் விக்கிரம சிங்க தலைமையிலான அரசாங்கம் மிகவும் வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்வது பாராட்டத் தக்கது என ஐக்கிய நாடுகள சபையின் செயலாளர் நாயகம் கோபி அனான தெரிவித்துள்ளார்.

191 நாடுகள அங்கம் வகிக்கும் ஐக்கிய நாடுகள சபையின் 58வது பொதுச்சபைக் கூட்டத்தின் பின்னர், ஐ.நா. செயலாளர் கோபி அனானை நியூயோர்க்கில் பிரதமர் ரணில் சந்தித்து உரையாடிய போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்தும கருத்துக்கூறுகையில் ,

இலங்கைக்கு நான் மேற்கொள்ளவிருக்கும் விஜயத்தின் போது மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான முயற்சிகள் பற்றியும்,அதனால் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகள் பற்றியும் விரிவாக ஆராயவிருக்கின்றேன்.

இலங்கையில் மீண்டுமோர் யுத்தத்திற்கு இடமளிக்காது நிரந்தர சமாதானம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு அரசு மீண்டும் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்த வேண்டும் என்றார்.

அத்துடன்,ஐக்கியநாடுகள் ஸ்தாபனமும் இலங்கையும் பேணிவரும் நெருங்கிய உறவுகள் குறித்தும் அனான் பாராட்டுத்தெரிவித்துள்ளார்.

இதேவேளை,ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் துணைநிறுவனங்கள் இலங்கைக்கு ஆற்றிவரும் உதவிகள் குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனது நன்றியையும் மகிழ்ச்சியையும் இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்தார். (பி-60,10)



# எரிபொருள் நிரப்பு நிலையங்களை வாங்க இந்திய நிறுவனங்கள் போட்டா போட்டி

(கொழும்பு)

இலங்கையில் உள்ள சுமார்100 எரிபொருள் நிரப்பு நிலையங்களைப் பொறுப்பேற்று நடத்த இந்தியாவின் தனியார்துறை எண்ணெய்க் கொம்பனி விலை கோரியுள்ளது.

இந்தியாவில் உள்ள தனியார் துறைக்கொம்பனிகளில் மிகப்பிரபல்யமான "றிலையன்ஸ் இன்டஸ்ரீஸ்" எனும் எண்ணெய்க் கொம்பனியே இலங்கையிலுள்ள இந்த 100 எரிபொருள் நிரப்பு நிலையங்களையும் பொறுப்பேற்கவுள்ளதாகத் தெரிய வருகிறது.

அத்துடன், இந்திய அரசுக்குச் சொந்தமான பாரத் பெற்றோலியம் கோப்பரேஷன் லிமிட்டெட் மற்றும் ஹிந்துஸ்தான் பெற்றோலியம் கோப்பரேஷன் லிமிட்டெட் ஆகிய நிறுவனங்களும் இங்கு எண்ணெய் சில்லறை விற்பனை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான அனுமதியைப் பெற்றுக் கொள்வதில் பெரும் ஆர்வம் காட்டி வருவதாகப் பெற்றோலியத் துறை வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான 100 எரிபொருள் நிரப்பு நிலையங்களை விற்பனை செய்வதற்கு இலங்கை அரசு முடிவெடுத்துள்ள நிலையில்,

மேற்படி 100 நிலையங்களையும் பொறுப்பேற்க விரும்பும் எண்ணெய்க் கொம்பனிகள் இதற்கான பிணக்கற்ற பணமுறிகள், தொழில் நுட்ப பிரேரணைகள் மற்றும் வியாபாரத் திட்டங்கள் ஆகியவற்றை அடுத்த மாதம் 21ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு இலங்கை அரசு கேட்டுள்ளது.

அத்துடன், இவ்வருட ஆரம்பத்தில் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் 100 எரிபொருள் நிரப்பு நிலையங்களைக் கையேற்ற இந்தியாவின் மிகப்பெரிய எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனமான இந்திய எண்ணெய்க் கூட்டுத்தாபனத்தின் துணை நிறுவனமான ஐ.பி.பி. கொம்பனி லிமிட்டெட்டும் தற்போது இந்த100 எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கான விலையையும் கோரியுள்ளது.

இந்த நிலையில், குஜராத்தின் ஜாம் நகர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து பெற்றோல்,டீசல் ஆகிய உற்பத்திகளை இலங்கைக்கு ஏற்றுமதி செய்யும் "றிலையன்ஸ் இன்டஸ்ரீஸ்" தனது உற்பத்தியை இலங்கையில் விற்பனை செய்து, நிலையூண்டுவதற்கு முயற்சி செய்து வருகின்றமையும் இங்கு குறிப்பிடத் தக்கது. (பி-18)

## இராசி பலன்

**29. 09. 2003**

**(புரட்டாதி 12,திங்கள்)**

**சதுர்த்தி- பி. இ. 12.58 வரை**

**சுவாதி- மு.ப. 8. 19 வரை**

**இராகுகாலம் - 7.32 - 9.02**

**சுபநேரம் - 12.02- 1.32**

**சதுர்த்தி விரதம், அமிர்தம்**

**மேடம்**
நண்பர் சந்திப்பு, காரிய அனுகூலம், பெருமை, சௌக்கியம்.

**இடபம்**
மனமகிழ்ச்சி, புதிய சிந்தை, தொழில் ஆர்வம், கருமம் கைகூடும்.

**மிதுனம்**
போசன நன்மை, தாழ்ந்த சுபாவம், புதிய விடயம், முயற்சி தாமதம்.

**கடகம்**
வாக்குமேன்மை, உடல் நலக்குறைவு, மனப்பயம், திடீர்நன்மை.

**சிங்கம்**
பிரயாண நன்மை, சந்தோசம், சத்துருஜெயம், முயற்சி கைகூடும்.

**கன்னி**
தனவிரயம், நண்பர் விரோதம், விவாதம், காரிய தாமதம்.

**துலாம்**
சயனசுகம், நல்ல மனைவாசம், மேன்மை, நல்ல முயற்சி.

**விருச்சிகம்**
நிலை மாற்றம், காரிய அலைச்சல், சுப செலவு, மனக்கிலேசம்.

**தனுசு**
முயற்சி கைகூடும், சுபநிகழ்ச்சி, தன இலாபம், குடும்பசுகம்.

**மகரம்**
நல்ல செய்தி, உற்சாகம், பிறருக்கு உதவுதல், தொழில் விருத்தி.

**கும்பம்**
காரிய தாமதம், பிரயாணம், பித்தரோகம், மனக்கிலேசம்.

**மீனம்**
வாகன பயம், உடல் வியாதி, வீண் பகை, காரிய தாமதம்.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

**- வளவன்.**

## புலிகளின் பிரதிநிதிகள்

# ஒக்டோபர் முதல் வாரத்தில் அயர்லாந்து செல்வர்

(கொழும்பு)

பரிஸில் தயாரிக்கப்பட்ட இடைக்கால நிர்வாக சபை தொடர்பான திட்டவரைபை மீளாய்வு செய்யும் பொருட்டு, அடுத்த மாதம் முதல் வாரத்தில் விடுதலைப்புலிகளின் முக்கிய தலைவர்கள் வட அயர்லாந்து செல்லவுள்ளனர்.

தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தலைமையில் செல்லும் இக்குழுவில், மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி கேணல் கருணா அம்மான், விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

அயர்லாந்து செல்லும் இவர்கள் அங்கு பல சுற்றுப்பேச்சுவார்த்தைகளை பல மட்டங்களிலும் மேற்கொள்ளவுள்ளனர். இக்குழுவினருடன் பரிஸில் கூடி இடைக்கால சபைக்கான வரைபைத் தயாரித்த சட்ட வல்லுநர்களும் இணைந்து கொள்ளவுள்ளனர்.

இவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து பரிஸில் தயாரிக்கப்பட்ட இடைக்கால நிர்வாக சபை மாற்று யோசனைகள் குறித்து சில முக்கிய விடயங்களை மீளாய்வு செய்யவுள்ளனரென்றும், அதன் பின்னர் ஐரோப்பிய, ஆபிரிக்க நாடுகளின் சட்டவல்லுநர்களையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர்.

இதனையடுத்து, சில தினங்களில் வன்னி திரும்பும் இவர்கள், தலைவர்பிரபாகரனுடன் கலந்தாலோசனை செய்த பின், திட்டவரைபு நோர்வே அரசு மூலம் இலங்கை அரசிடம் சமர்ப்பிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(வ)

## சுற்றாடல் தொடர்பான சட்டங்களை மீறும்

# கைத்தொழில் அதிபர்கள் மீது கடும்நடவடிக்கை எடுக்கப்படும்

(கொழும்பு)

சுற்றாடல் தொடர்பான சட்டங்களை மீறும் கைத்தொழில் அதிபர்கள் மீது மத்திய சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபை சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாக அதிகாரசபையின பேச்சாளர் ஒருவர் எச்சரிக்கை விடுததுள்ளார்.

சுற்றாடல் சட்டங்களை மதித்து நடக்காத கைத்தொழில் அதிபர்கள் குறித்து பல முறைப்பாடுகள் கிடைத்திருப்பதாகவும்,

குறிப்பாக சில கைத்தொழில் அதிபர்கள் இரசாயனப் பொருட்களின் கழிவுகளை, பாதுகாப்பின்றி பொதுமக்கள் வாழும் பகுதிக்குள் செலுத்துவதாகவும் குறிப்பிட்ட அவர்,

இத்தகைய கைத்தொழில் அதிபர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவா மேலும் தெரிவித்தார். (பி-60,10)

*வேலொடு நின்றான் இடு என்றது போலும்*
*கோலொடு நின்றான் இரவு* — குறள்

# வலம்புரி

## ஜே.வி.பியின் தேசபக்தி எது!

ஜே.வி.பியின் மறுவடிவமான தேசாபிமான தேசிய இயக்கம் கண்டியில் இருந்து கொழும் பிற்கான மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணியொன்றை ஆரம்பித்துள்ளது.

அரசு முன்னெடுத்துவரும் சமாதான முயற்சியினை எதிர்த்து நடத்தப்படும் இவ் ஆர்ப்பாட்டப் பேரணியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டுள்ளனர். இலங்கைத் திருநாடு சிங்கள இனத்திற்கு மட்டுமே சொந்தம் என்ற அடிப்படையிலேயே தேசாபிமான தேசிய இயக்கம் உருவாக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டுச் சேரும் முயற்சிகள் தோல்வி கண்டதன் பின்னணியில் ஜே.வி.பியால் உருவாக்கப்பட்ட தேசாபிமான தேசிய இயக்கம் நாட்டில் முன்னெடுக்கப்படவுள்ள சமாதான முயற்சியைக் குழப்பும் ஓர் நடவடிக்கையாகும். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்து சமாதான முயற்சியைக் குழப்பும் ஜே.வி.பியின் பாரிய சதித் திட்டம் நிறைவேறாது போக, அதற்கு மாற்றீடாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கிய உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் ஜே.வி.பியால ஆரம்பிக்கப்பட்ட தேசாபிமான தேசிய இயக்கம் அரசும், விடுதலைப் புலிகளும் முன்னெடுக்கவுள்ள சமாதான முயற்சிக்குக் குழப்பத்தை ஏற்படுத்தும் நோக்கில் தமது எதிர்ப்புக் குரலைக் காட்டத் தொடங்கியுள்ளது.

தேசாபிமானம் என்றால் என்ன என்பதன் தாற்பரியத்தைப் புரிந்துகொள்ளாத ஜே.வி.பி. நாட்டில் சமாதானம் குழம்பி சண்டை நடப்பதே நாட்டின் மீது பற்றுக் கொண்டவர்களின் கொள்கை எனக் காட்டி நிற்கிறது.

கடந்த இரு தசாப்தங்களாக மனித உயிர்களைக் காவு கொண்ட யுத்தத்தை ஆதரிப்பதா? தேசாபிமானம், ஏழைச் சிங்கள இளைஞர்கள் வறுமையின் நிமித்தம் இராணுவத்தில் சேர்ந்தனர். இது நாட்டுப் பற்றில் ஏற்பட்ட விளைவன்று, நாட்டில் ஏற்பட்ட வறுமையின் விளைவு. இத்னைப் புரிந்து கொள்ளாத ஜே.வி.பி. கொழும்பிலும், கண்டியிலும் நின்று கொண்டு தேசத்தின் புகழ் பாடுகின்றது.

இன்று வரை இராணுவத்தில் இருந்து தப்பியோடிய ஆயிரக்கணக்கான சிங்கள இளைஞர்களைத் தேடிப்பிடிக்கும் முயற்சி வெற்றி பெறவில்லை. இராணுவத்திற்கான ஆட்சேர்ப்பு பிசுபிசுத்துப் போயுள்ளது. இத்தகைய நிலைமை சிங்கள இளைஞர்கள் எவரும் இராணுவத்தில் சேர்ந்து சண்டையிடத் தயாரில்லை என்பதையே காட்டி நிற்கிறது. இதுவே யதார்த்தம். இதற்கு மாறாகத் தொழிற்படும் ஜே.வி.பி உண்மை நிலையைப் புரிந்து கொள்ள வேண்டும்.

# உயர் பாதுகாப்பு வலயங்களுக்கு எதிராக
# பாராளுமன்றின் உள்ளேயும் வெளியேயும்
# எம்.பிக்கள் போராட்டங்களை நடத்துவர்

## நேற்றைய கலந்துரையாடலில் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் உள்ள அதி உயர் பாதுகாப்பு வலயங்களை நீக்கக்கோரியும் அதியுயர் பாதுகாப்பு வலயப் பகுதியில் இருந்து வெளியேற்றப்பட்ட மக்களை மீளக் குடியமர்த்துமாறு வலியுறுத்தியும் யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் மிக விரைவில் தொடர் அறவழிப் போராட்டங்களை நடத்தவுள்ளது.

வலி.வடக்கில் உள்ள உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசங்களில் பொதுமக்களை மீளக்குடியமர்த்தும் வகையில் கடந்த காலங்களில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளால் எந்தவித பலனும் ஏற்படாத நிலையில், இதுவிடயத்தில் எடுக்கப்பட வேண்டிய அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுடனான மிக முக்கிய கலந்துரையாடல் ஒன்று நேற்று வலி.வடக்கு பொது அமைப்புக்களின ஒன்றிய ஏற்பாட்டில அதன் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சிவமகாராசா தலைமையில் தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச்சங்க மண்டபத்தில் இடம் பெற்றபோது மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டது.

யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, என்.ரவிராஜ், ஜி.ஜி.கஜேந்திரகுமார், என்.கே.சிவாஜிலிங்கம் மற்றும் யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியப் பிரதிநிதிகள், தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பெருமளவினர் பங்கேற்ற இந்தக் கலந்துரையாடல் மு.ப.10.00 மணி முதல் 3.00மணிவரை இடம பெற்றது.

அதியுயர் பாதுகாப்பு வலயங்களில் மீள்குடியமர்வு மற்றும் கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட அவசரப் பணிகள் குறித்து நீண்டநேர வாதப் பிரதிவாதங்களின் பின்னர் இக் கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட ஏனைய தீர்மானங்களாவன;

* யாழ்.குடாநாட்டில் மக்களின் மீள்குடியமர்வுக்கு இடையூறாகப் படைத் தரப்பினர் அமைத்துள்ள உயர் பாதுகாப்பு வலயங்களுக்கு எதிராக கொழும்பு உயர் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்தல்.

* உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசத்தில் மக்களை மீளக்குடியமர்த்தக்கோரி பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தொடர் போராட்டங்களை முன்னெடுத்தல்.

* மக்களின் மீள் குடியமர்வுக்கு படைத்தரப்பினர் தடையாகவிருப்பது குறித்து வெளியுலகிற்கு வெளிச்சம் போட்டுக்காட்டும் வகையில், ஐ.நா. சபையின் செயலாளர் கோபி அனானுக்கு அண்மையில் ஒருலட்சம் பொது மக்களின் கையொப்பங்களைத் திரட்டி அனுப்பப்பட்ட மகஜரைப் போன்று மேலும் ஓர் மகஜரை இலட்சக்கணக் கான ஒட்டுமொத்த வடபகுதித் தமி ழர்களிடமும் திரட்டி அனுப்புதல்.

* மேற்படி தீர்மானங்களை அமுல்செய்யும் வகையில் நடவடிக்கைக் குழு ஒன்றினை அடுத்த வாரம் ஆரம்பித்தல்.

(உ-16,12)

# சர்வதேச நாடுகள் ஆராயும் அளவுக்கு
# தமிழ் மக்களின் தலைவிதி அமைந்துள்ளது

## சிறப்புத் தளபதி ரமேஷ் உரை

(கெழும்பு)

மீண்டுமோர் ஆயுதப்போர் ஆரம்பிக்கக்கூடாது என்பதனாலேயே ஐக்கியதேசிய முன்னணி அரசாங்கத்துடன் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டன.

இவ்வாறு மட்டக்களப்பு-அம்பாறை மாவட்டச் சிறப்புத் தளபதி ரமேஷ் பெரிய கல்லாறு மத்தியகல்லூரியில் நடந்த நிகழ்வொன்றில் தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் பேசிய ரமேஷ், இன்று சாவதேச நாடுகள் ஆராயும் அளவுக்கு தமிழ் மக்களின அரசியல் தலைவிதி நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

வடக்கு-கிழக்கு இடைக்கால நிர்வாகசபை தொடர்பாக அரசியல் சட்டத்தில் இடமில்லை என சிங்கள அரசுகள் கூறமுனைந்து வருகின்றன.

தமிழ் மக்கள் விமோசனம் பெறக் கூடாது என்பதற்காகவே இந்தச் சட்டம் இயற்றப்பட்டது.

தமிழ் மக்கள் நிம்மதியுடன், சுதந்திரத்துடன் வாழவேண்டும் என் பதற்காகவே ஆயுதப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

ஆயுதப் போராட்டத்தின் விளைவுகளை சிங்களப் பேரினவாதம் தற்போது முற்றாக உணர்ந்துள்ளது.

ஆனாலும், பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவினால் மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதான முயற்சிகளை சில தீய சக்திகள் குழப்பி வருகின்றன.

இவற்றுக்கெல்லாம் உரிய தீர்வு விரைவில் கிட்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(தி-61)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

சி.ஐ.எஸ்.ஆர்.எஸ் இன் ஏற்பாட்டில், ''யாழ்.சமுதாயமும், கலாசார பிறழ்வும்'' எனும் தலைப்பிலான கருத்தரங்கொன்று இன்று திங்கட் கிழமை பி.ப.3.30மணிக்கு வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் என்.ஏ.விமலேநதிரன் தலைமையில் யாழ்.வைத்தியசாலை முன்பாகவுள்ள யாழ்ப்பாணக் கல்லூரி வெளிவாரிப் பட்டப்படிப்புகள் பிரிவு அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி கருத்தரங்கில் தென்னிந்திய திருச்சபையின் பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன் ஆசியுரையையும், யாழ்ப்பாணக் கல்லூரி விரிவுரையாளர் பொ.அருந்தவநாதன் கருத்துரையையும் வழங்கவுள்ளனர். (உ-18)

# குடிநீர்ப் பிரச்சினைக்கு
# விரைவில் தீர்வு கிட்டும்

(கந்தர்மடம்)

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில் உள்ள மெலிஞ்சிமுனை கிராமத்தில் பல வருடங்களாகப் பயன்படுத்தப்படாது பாழடைந்த நிலையில் இருந்த குடிநீர்ப பொதுக் கிணற்றை பட்டினிக்கெதிரான நிறுவனம் புனரமைப்புச் செய்துள்ளது.

இதனால் இருநூறிற்கும் அதிகமான மெலிஞ்சிமுனை மக்கள் பயனடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவைதவிர, மெலிஞ்சிமுனைக் குடியிருப்புப் பகுதியில் 3 நீர்த்தொட்டிகளை அமைக்கும் பணியிலும் பட்டினிக்கெதிரான நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

இம 3 நீர்த்தொட்டிகளும் அமைக்கப்பட்டதும் ஊர்காவற்றுறைப் பிரதேச சபையினரால் 'பவுசர்' மூலம் குடிநீர் விநியோகிக்கும் திட்டம் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இவற்றையடுத்து, தீவுப் பகுதியில் நிலவும் குடிநீருக்கான தட்டுப்பாடு விரைவில் நீங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

(தி-112,10)

# வெடிப்பொருட்களைப் பயன்படுத்தி
## மீன் பிடிப்பதற்குத் தடை

(கொழும்பு)

கடற்றொழிலில் ஈடுப்டுவோர் வெடிப் பொருட்களைப் பயன்படுத்தி கடல் உணவுகளைப் பிடிப்பதற்கு நாடளாவிய ரீதியில் தடை விதிக்கப்பட்டுள்ளது.

கடற்றொழில் நீரியல்வள திருத்தச்சட்ட மூலங்கள் நேற்று முன்தினம் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டு விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே மேற்படி முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், வெடிப் பொருட களைப் பயன்படுத்தி மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுவோர்க்கு தலா 10ஆயிரம் முதல் 50ஆயிரம் வரை தண்டப்பணம் அறவிடப்படும் அல்லது 5 ஆண்டுகள் சிறைத்தண்டனை வழங்கப்படும் இல்லாவிடின், குற்றங்களைப் பொறுத்து மேற்படி இரண்டு தண்டனைகளும் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, நபர் ஒருவர் ஒரு முறை இவ்வாறான குற்றத்தைப் புரிந்து விடுபட்டு பின்னர் இரண்டாம் முறையாகவும் இதே குற்றத்தைச் செய்தால் சுமார் ஒருலட்சம் ரூபா அபராதம் அல்லது சிறைத் தண்டனை வழங்கப்படும் எனவும் மேற்படி திருத்தச் சட்டமூலத்தின் விவாதத்தின் பின்னர் முடிவெடுக் கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. (உ-18)

## திினசரி தியானம்

### காலம் விலை மதிப்பற்றது

காலம் விலை மதிப்பற்றது. விரைந்தோடிக் கொண்டிருக்கிறது. நீங்கள் ஒவ்வொரு வினாடியும் முதுமை அடைந்து கொண்டிருக்கின்றீர்கள். நீங்கள் பிறந்த அதே வினாடி இறப்பும் உடன் வந்துவிடுகிறது. உயிர் அணுக்கள் வளர்கின்றன, அழிகின்றன. மீண்டும் இந்த மானுடப் பிறவியைப் பெறமுடியாது. உங்களது வாழ்க்கையில் வெற்றிபெறும் மனிதராக இந்த வினாடியே புத்தரைப் போல வாழுங்கள். உங்களது உற்ற சகோதரரான இறைவனின் அவா மிக்க பிரார்த்தனை இதுவே. பெருமையும் சிறப்பும் உங்களை வந்தடையட்டும்.

சுவாமி சிவானந்தர்

# பாதுகாப்பு நிலைவரம் குறித்து
# பாராளுமன்றத்தில் விவாதம்

(கொழும்பு)

நாட்டின் தற்போதைய பாதுகாப்பு நிலைவரம் குறித்து பாராளுமன்றத்தில் விவாதம் ஒன்றை நடத்துவதென கட்சித்தலைவர்களின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

எதிர்க்கட்சிகளின் வேண்டுகோளுக்கு இணங்க பாராளுமன்ற ஒத்திவைப்பு பிரேரணைமீதான விவாதத்தின் போது இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதற்கமைய சபாநாயகர் யோசப் மைக்கல் பெரேரா தலைமையில் அடுத்தமாதம் 8ஆம் திகதி இவ் விவாதம் நடத்தப்படவுள்ளது.

இதேவேளை, நாட்டின் தற்போதைய நிலைவரம் தொடர்பாக பொலிஸ்மா அதிபர் ரீ.ஈ.ஆனந்தராஜா சபாநாயகரிடம் விசேட அறிக்கை ஒன்றினையும் சமர்ப்பித்துள்ளார்.

(தி-61)

## சுகாதார சேவை ஊழியர்கள்
## படிப்படியாக பணிக்குத் திரும்புகின்றனர்

புத்தளம், கற்பிட்டி வைத்தியசாலைகளில் மனிதாபிமான சேவையில் ஈடுபட, வேலைநிறுத்தத்தில் ஈடுபட்ட சில சுகாதார சேவை அதிகாரிகள் மற்றும் சிற்றூழியர்கள் முன்வந்துள்ளனர்.

புத்தளம் வைத்தியசாலையில் 12 ஊழியர்களும், கற்பிட்டி வைத்தியசாலையில் 10 ஊழியர்களும் கடந்த புதன் கிழமை முதல் கடமைக்குத் திரும்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(உ-15)

# ஜே.வி.பி நடத்தும் ஊர்வலத்தில் ஸ்ரீ.சு.கட்சிப் பிரமுகர்கள் பங்கேற்பு!

## ஜனாதிபதியும் அனுமதி வழங்கினார்

(கொழும்பு)

ஜே.வி.பியால் ஒழுங்கு செய்யப்பட்டு கண்டியிலிருந்து கொழும்புவரையான 117 கிலோ மீற்றர் தூரம் நடத்தவுள்ள எதிர்ப்பு ஊர்வலத்தின் ஆரம்ப நிகழ்வில் 6000 பேர் வரை கலந்துகொண்டிருந்தனர். ஜே.வி.பி யினரின இவ்வூர்வல ஆரம்ப நிகழ்வில் ஸ்ரீ.சு.கட்சியைச் சேர்ந்த முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்கிரம நாயக்க, முன்னாள் அமைச்சர்களான ஜெயராஜ் பர்ணாண்டோ புள்ளே, மங்களசமரவீர, சரத்அமுனுகம, அர்ஜுன ரணதுங்க போன்றோர் கலந்துகொண்டனர்.

ஜே.வி.பியுடனான பேச்சுக்கள் முறிவடைந்த 2 வாரங்களுக்குள் தனது கட்சி அங்கத்துவர்களை ஜே.வி.பியால் நடாத்தப்படும் தேசிய தேசபக்தி இயக்கத்தில் பங்குபற்றுவதற்கான அனுமதியை வழங்குவதற்கு ஜனாதிபதிக்கு நிர்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. இவ்வூர்வலத்தில் கலந்துகொண்ட ரட்ணசிறி விக்கிரம நாயக்க உரையாற்றும்போது காட்டிக்கொடுப்புகளில் இருந்து நாட்டைக்காப்பாற்றுவதற்கு, சகல எதிர்கட்சிகளும் ஒன்றிணைந்து போராட வேண்டும் என்றார். இவ்வூர்வலம் கண்டி தலதா மாளிகைக்கு எதிரில் ஆரம்பமாகியது. இதேவேளை, தனது கட்சியில் பிளவு ஏற்படுவதை தவிர்ப்பதற்கும், ஜே.வி.பி தலைமையில் பரந்த கூட்டணி ஒன்று அமைவதை தடுக்கும் முகமாகவும் பேச்சுக்களை மீள ஆரம்பிக்க 5 அங்கத்தவர்களைக்கொண்ட குழுவினரை ஜனாதிபதி கடந்த வெள்ளியன்று நியமித்துள்ளார். இக்குழுவில் ஸ்ரீ.ல.சு.கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேனவும், சரத் அமுனுகம, நிமால்சிறிபால டி சில்வா, சுசில் பிறேமஜயந்த, அர்ஜுன ரணதுங்க, ருடோர்தயாரட்ன ஆகியோர் அடங்குவர்.

ஏற்கனவே குழுவில் இருந்தவர்களான அமுனுகமவும், சிறிபாலடிசில்வாவுமே இப்போதைய குழுவிலும் அங்கத்தவர்களாகவுள்ளனர். தம்முடன பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்கு நியமிக்கப்பட்ட குழுவின் தலைவராக மைத்திரிபால சிறிசேன இப்பொழுது நியமிக்கப்பட்டதை இன்னும் உத்தியோகபூர்வமாக அறியத்தரப்படவில்லையென் விமல் வீரவன்ச தெரிவித்தார். எவ்வாறாயினும் புதிய குழுவில் அமுனுகம மட்டுமே ஜே.வி.பி.யுடன் கூட்டணியை ஆதரிப்பவரென்றும் ஏனையோரில் 2 பேர் இதை எதிர்ப்பவர்களாகவும் இருப்பதால் இப்புதிய குழுபற்றி ஜே.வி.பி தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளது.

கடந்தவாரம் நடைபெற்ற ஸ்ரீ.ல.சு.கட்சியின் மத்திய குழுக்கூட்டத்தில் பேசிய ஜனாதிபதி எதிர்ப்பு ஊர்வலத்தில் பங்குபற்றும் கட்சி அங்கத்தவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவித்திருந்தார். ஆனால் பின்னர் தனது முடிவை மாற்றிக்கொண்டு மேற்படி ஊர்வலத்தில் பங்குபற்றுவதற்கு அனுமதி அளித்துள்ளார். ஸ்ரீ.ல.சு.கடசியின் பலமான கோட்டையான நிட்டம்புவவில் இவ்வூர்வலம் பெரியளவில் நடாத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஜே.வி.பி.யுடன் மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிக்குமாறு ஜனாதிபதிக்கு பல வழிகளிலும அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுவதாக சுதந்திரக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(ந)



கொழும்பு விஹாரமாதேவி திறந்த வெளியரங்கில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா; டிலான் பெரேரா எம்.பி. மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி, விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர் சங்கத்தினருடன் உரையாடுவதைப் படத்தில் காணலாம்.

(செய்தி முதலாம் பக்கத்தில்)

# சமாதானம் வெற்றி பெற்றால் மகிழ்வுறும் முதல் மனிதர் கலைஞரே

## மு.க.ஸ்ராலின் பி.பி.ஸிக்கு பேட்டி

(லண்டன்)

அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடைபெற்றுவரும் பேச்சுவார்த்தை வெற்றி பெறுமானால் மகிழ்ச்சி அடையக் கூடியவர்கள் தி.மு.க. தலைவர் கருணாநிதியைத் தவிர வேறுயாரும் இருக்க முடியாது.

இவ்வாறு தி.மு.க.வின் துணைப் பொதுச் செயலாளர் மு.க.ஸ்ராலின் லண்டன் பி.பி.ஸிக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நிரந்தர சமாதானம் ஏற்படுத்துவதற்கு கருணாநிதி எடுத்த முயற்சி பற்றி யாவருக்கும் தெரியும். ஆனால் எதிர்பாராத சூழ்நிலையில் ராஜீவ் காந்தியின் படுகொலைக்கு பின்பு சூழ்நிலைகள் மாறறப்பட்டு முயற்சிகள் இடைநிறுத்தப்பட்டன. தற்பொழுது ஆட்சியிலிருக்கும் ஜெயலலிதா விடுதலைப் புலிகளைக் கொச்சைப் படுத்திப் பேசிக்கொண்டிருக்கின்றார். எது எவ்வாறாயினும் இன்று இருக்கின்ற சூழ்நிலையில் ஈழத்தமிழர்களுக்கு நிரந்தர சமாதானம் கிடைக்குமானால் தி.மு.க. அதனையிட்டு மகிழ்ச்சியடையும் என்றார்.

(ந-5)

# இலங்கைக்குப் புதிய அமெரிக்கத் தூதுவர் நியமனம்

(கொழும்பு)

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவராக ஜெப்ரிலுண்ஸ் றெட் கடந்த வெள்ளியன்று ஜனாதிபதி குமாரதுங்கா முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். இவர் அமெரிக்க வெளியுறவு அமைச்சின் ஆலோசகராகவும், வெளிநாட்டுச் சேவையின் அங்கத்தவராகவும் விளங்குகிறார். தற்போது இலங்கைக்கும், மாலைதீவுக்குமான தூதுவராக கடந்த யூலை 28 அன்று நியமிக்கப்பட்டார். 1977 இல் வெளிநாட்டுச் சேவையில் இணைந்து பாகிஸ்தான், இந்தியா, பங்களாதேஷ், மலேசியா போன்ற நாடுகளில் பணியாற்றிய இவர், ஆப்கானிஸ்தானுக்குரிய தெற்காசியப் பணியக ஒன்றிணைப்பாளராகவும், பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ்போன்ற நாடுகளுக்கான பணியகத் தலைவராகவும் கடமையாற்றியுள்ளார். சர்வதேச சூழலியல் சம்பந்தப்பட்ட பதவிகளை வகித்த இவர் அமெரிக்கக் கடற்படையில் சேவையாற்றியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(ந)

# காய்ச்சலால் சிறுவன் மரணம்

(வயாவிளான்)

காய்ச்சலால் பாதிக்கப்பட்ட சிறுவன் சிகிச்சை பலனளிக்காததினால் 6 நாட்களின் பின் மரணமடைந்தான்..

வயாவிளான் சுதந்திரபுரத்தைச் சேர்ந்த விக்னேஸ்வரன் விஜய் (வயது8) என்ற சிறுவனே மரணமானவராவார்.

கடந்த 22 ஆம் திகதி காய்ச்சலினால் பாதிக்கப்பட்ட சிறுவன் அச்சுவேலி அரசினர் வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றிருந்தார். எனினும் 27 ஆம் திகதி காலையில் சிறுவன் மரணமடைந்துள்ளான்.

(ந-72)

## ஐ.நா.செயலாளர்...

கொபி அனானின் வன்னி விஜயம் இலங்கையில் இரு நாடுகள் இருப்பதை சர்வதேசத்திற்கு எடுத்துக்காட்டுவதாக இருக்கும் என்று கொழும்பு நிர்வாகம் தயக்கம் காட்டிவருகின்றது. இதனாலேயே அவர் இலங்கை


நெருப்பாற்று நீச்சலிற் பத்தாண்டுகள் நூல் வெளியீடு

நெருப்பாற்று நீச்சலிற்....

MEDICAL CHECK UP

வைத்திய பரிசோதனை

நோய் வருமுன் காப்போம்

திடீர் மரணத்தைத் தவிர்ப்போம்

+ 40 வயதிற்கு மேற்பட்ட நோய் உள்ள, நோய் அற்ற அனைவரும் இந்த MEDICAL CHECK UP ஐச் செய்வதன் மூலம் நோயற்ற

இவ்வாறு தி.மு.க.வின் துணைப் பொதுச் செயலாளர் மு.க.ஸ்ராலின் லண்டன் பி.பி.ஸிக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நிரந்தர சமாதானம் ஏற்படுத்துவதற்கு கருணாநிதி எடுத்த முயற்சி பற்றி யாவருக்கும் கொண்டிருக்கின்றார். எது எவ்வாறாயினும் இன்று இருக்கின்ற சூழ்நிலையில் ஈழத்தமிழர்களுக்கு நிரந்தர சமாதானம் கிடைக்குமானால் தி.மு.க. அதனையிட்டு மகிழ்ச்சியடையும் என்றார்.

(ந-5)

பெரியளவில் நடாத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஜே.வி.பி.யுடன் மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிக்குமாறு ஜனாதிபதிக்கு பல வழிகளிலும அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுவதாக சுதந்திரக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(ந)

கடந்த 22 ஆம் திகதி காய்ச்சலினால் பாதிக்கப்பட்ட சிறுவன் அச்சுவேலி அரசினர் வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றிருந்தார். எனினும் 27 ஆம் திகதி காலையில் சிறுவன் மரணமடைந்துள்ளான்.

(ந-72)

களாதேஷ்போன்ற நாடுகளுக்கான பணியகத் தலைவராகவும் கடமையாற்றியுள்ளார். சர்வதேச சூழலியல் சம்பந்தப்பட்ட பதவிகளை வகித்த இவர் அமெரிக்கக் கடற்படையில் சேவையாற்றியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(ந)

## நெருப்பாற்று நீச்சலிற் பத்தாண்டுகள் நூல் வெளியீடு




(யாழ்ப்பாணம்)

சாள்ஸ் சிறப்புப் படையணியின் ''நெருப்பாற்று நீச்சலிற் பத்தாண்டுகள்'' நூல் வெளியீட்டு விழா நாளை மறுதினம் புதன்கிழமை யாழ்.பல்கலைக்கழக கைலாசபதியரங்கில் பிற்பகல்3.30 மணிக்கு இடம்பெறும்.

அமுதாப் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வரவேற்புரையை லோறன்சும், சிறப்புரையை யாழ் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதியும், நூல் வெளியீட்டுரையை கலைக்கோனும மதிப்பீட்டுரையை கவிஞர் புதுவை இரத்தினதுரையும் மற்றும் பேராசிரியர் செ.கிருஸ்ணராசா ஆகியோரும் நிகழ்த்த நன்றியுரையை பாவலன் நிகழ்த்துவார்.

(ந)

## ஐ.நா.செயலாளர்...

கொபி அனானின் வன்னி விஜயம் இலங்கையில் இரு நாடுகள் இருப்பதை சர்வதேசத்திற்கு எடுத்துக்காட்டுவதாக இருக்கும் என்று கொழும்பு நிர்வாகம் தயக்கம் காட்டிவருகின்றது. இதனாலேயே அவர் இலங்கை வருவதைத் தற்போதைக்கு நிறுத்தி உள்ளார் என்றும், வேறொரு சந்தர்ப்பத்தில் அவர் இலங்கைக்கு வர முடிவு செய்யலாம் என்றும் தெரியவருகின்றது.

(ந)

## தமிழீழ...

தமிழீழ விடுதலைப் புலிகள் தமது சமாதான செயலகத்தில் அதிகமானோரைப் பணிக்கு அமர்த்தி பணிகளை விரிவுபடுத்தவுள்ளனர். விடுதலைப் புலிகளுக்கும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுக்களுக்கும் இடையே எந்தவிதமான முறுகல் நிலையும் ஏற்படவில்லை. விடுதலைப் புலிகளும், இலங்கை அரசுமே யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவை உருவாக்கினார்கள். அவர்கள் இருவருக்காகவுமே நாம் செயலாற்றி வருகின்றோம் என்றும் தெரிவித்தார். (ம)

## கண்காணிப்புக்குழு...

துக்கொள்ள வேண்டும் என்றும் எடுத்துக்கூறியுள்ளனர்.

நேற்றைய இச் சந்திப்பில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் தலைமையில் யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன், திருகோணமலை அரசியல் துறைப் பொறுப்பாளர் திலக், மட்டு. அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் மற்றும் புலிகளினால் நியமிக்கப்பட்ட உளளூர் கண்காணிப்புக் குழு உறுப்பினர்கள் ஆகியோரும், யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு சார்பில மேஜர் ஜெனரல் றிட்ஜ்வே ரெல்சன் மற்றும் வடக்கு - கிழக்கு மாகாண மாவட்டக் கண்காணிப்புக்குழு அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.(ம)


# MEDICAL CHECK UP

## வைத்திய பரிசோதனை

**நோய் வருமுன் காப்போம்**
**திடீர் மரணத்தைத் தவிர்ப்போம்**

- 40 வயதிற்கு மேற்பட்ட நோய் உள்ள, நோய் அற்ற அனைவரும் இந்த MEDICAL CHECK UP ஐச் செய்வதன் மூலம் நோயற்ற சுகவாழ்வு வாழலாம்
- X-RAY- ECG, சில முக்கிய இரத்தப் பரிசோதனைகள் சிறுநீர்ப் பரிசோதனை.

இலவச வைத்திய ஆலோசனையுடன் கூடிய MEDICAL CHECK UP குறைந்த கட்டணத்தில்! விபரங்களுக்கு நேரில்!

போக்குவரத்து வசதி கருதி

**சம்பந்தர் மொடேர்ன் கிளினிக்**

(அமுல் கிறீம் ஹவுஸ் அருகில்)
ஆஸ்பததிரி வீதி, யாழப்பாணம்.



## அன்பு மாணவர்களே!

*உங்களின் கவிதைத் திறனை வெளிப்படுத்த நவராத்திரி காலத்தில்*



**வலம்புரியில் வெளிவரும்**

**நவராத்திரி பாமாலைக்கு**

4 தொடக்கம் 8 வரிக்குட்பட்ட கவிதைப் பாமாலைகளை

மு.குறிப்பு: மாணவர்களுக்கு மட்டும் இதில் சந்தர்ப்பம் வழங்கப்படுவதால் மாணவர்கள் தமது சொந்த ஆக்கத்தை பாடசாலையின் பெயருடன் அனுப்பி வைக்க வேண்டும்.

**அனுப்ப வேண்டிய முகவரி:**

**நவராத்திரி பாமாலை**
**வலம்புரி**
**இல.15இ வெள்ளாந்தெரு,**
**யாழ்ப்பாணம்.**


இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.09.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.